விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 23 செவ்வாய்க்கிழமை (08.08.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 232

ராம்கோ

RAMCO

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# நோர்வேயின் அமைதி முயற்சிகளை அரசு திட்டமிட்டு சீர்குலைக்கின்றது

## விடுதலைப்புலிகள் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் நல்லெண்ண நடவடிக்கைகளை நிராகரித்தது மட்டுமல்லாது நோர்வேயின் அமைதி முயற்சிகளையும் அரசாங்கம் திட்டமிட்டு சீர்குலைத்துள்ளது என விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## மாவிலாறு நோக்கி பாரிய தாக்குதல்

திருகோணமலை மாவிலாறு நோக்கிய இராணுவத்தின் பெரும் எடுப்பிலான நகர்வு முயற்சி விடுதலைப்புலிகளால் முறியடிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கனரக ஆயுதங்கள் துணையுடன் ஆட்லறி எறிகணை வீச்சு மற்றும் விமானப்படை தாக்குதல்களுடன் நேற்றுக் காலை மாவிலாறு நோக்கி இராணுவம் பாரிய அளவிலான நகர்வு முயற்சியினை மேற்கொண்டது. இத் தாக்குதலுக்காக விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பிரதேசங்கள் மீது விமானப் படையின் கிபீர் விமானங்கள் சரமாரியான குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை இருக்கும்வரை அனைவரும் அடங்கியே போகவேண்டும்

### தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

## விடுதலைப்புலிகளின் நிபந்தனையை ஏற்க நோர்வேக்கு உரிமையில்லை

### அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் முன்வைக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள நோர்வே சிறப்புத்தூதுவர் ஹான்சன் பௌயர் மற்றும் நோர்வேக் குழுவினருக்கு எதுவித உரிமையும் இல்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் விதித்த நிபந்தனைகளை ஒப்புக்கொள்வதற்கு முன்பாக அரசாங்கத்திடம் நோர்வே பிரதிநிதிகள் தெரிவித்திருக்கவேண்டும்.

ஆனால் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வராமல் நிபந்தனைகளை ஒப்புக்கொள்வதற்கு நோர்வேப் பிரதிநிதிகளுக்கு எதுவித உரிமையும் இல்லை என அரசாங்கப்பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நீர், அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட மனிதாபிமான தேவைகளை நிபந்தனையாக முன்வைப்பதை அரசாங்கம் ஏற்காது. இத்தகைய நிபந்தனைகளை அரசாங்கம் நிராகரிக்கிறது.

நாட்டினது அணைக்கட்டு நிர்வாகங்களை புலிகளின் கையில் ஒப்படைக்க நாங்கள் தயாராக இல்லை. அணையை மூடுவதும் திறப்பதும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ்த்தான் இருக்கவேண்டும்.

அணைக்கட்டுப் பகுதியை இராணுவத்தினர் நெருங்கிவிட்டனர். நீர்ப்பாசனத் திட்டப் பொறியியலாளர்களும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சென்.ஜோண்ஸ் கல்லூரி மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்புப் போராட்டம்

சென்.ஜோண்ஸ் கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள இராணுவ காவலரணை அகற்றக்கோரி அக் கல்லூரி மாணவர்கள் நேற்றுக் காலை 8 மணிக்கு கல்லூரிக்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். வீதிகளில் ரயர் எரிப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

தாங்கியவாறே அவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நேற்று அவ்வீதியில் போக்குவரத்து பல மணிநேரம் தடைப்பட்டிருந்தது.

இதேவேளை ஏழாலை கல்லூரிக்கும் சதோதரப்பாடசாலைக்கும் அருகில் உள்ள இராணுவ காவலரண் அகற்றப்பட்டு சுதந்திர

## தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டிருப்பது சரியா இல்லையா என்பது விவாதத்திற்குரியது என்றாலும் அந்த தடை அமுலில் இருக்கும் வரை அந்த தடைக்கு அனைவரும் அடங்கித்தான் செல்ல வேண்டும் என்றும் அதை மீறிச் செல்வோம் என்று யாராவது செயல்பட்டால் அதனால் ஏற்படுகின்ற விளைவுகளை அவர்கள் ஏற்றுத்தான் தீரவேண்டும் என்று தமிழக முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டமன்றத்தில் நேற்று நடந்த விவாதத்தின்போது அவர் இவ்வாறு கூறினார். முன்னதாக தமிழக சட்டமன்றத்தில் நேற்றுக் காலை காங்கிரஸ் கட்சியின் சட்ட மன்ற உறுப்பினர் (10 ஆம் பக்கம் பார்க்க)

னர். வீதிகளில் ரயர் எரிப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

குடா நாட்டுப் பாடசாலை மாணவர்கள் சுதந்திரமாகக் கற்கவேண்டும். ஆக்கிரமிப்பு இராணுவம் எமது பாடசாலைகளிலிருந்து விலக வேண்டும். இல்லையேல் மாணவர்கள் அடித்து விரட்டுவர்.சிங்கள இராணுவமே எம்மைச் சீண்டினால் போர்க்களத்தில் சந்திப்போம் போன்ற சுலோக அட்டைகளைத்

தரப்பாடசாலைக்கும் அருகில் உள்ள இராணுவ காவலரண் அகற்றப்பட்டு சுதந்திரமாக கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ள வழிசெய்ய வேண்டுமெனவும் நாம் இதற்கு மிக விரைந்து எமது கோரிக்கையினை பரிசீலனையில் எடுக்கவேண்டும் எனவும் சென். ஜோண்ஸ்கல்லூரி தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-133)

## ஓட்டோ ஓட்டுநர் சுட்டுக்கொலை

ஆனைக்கோட்டையில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் 20 வயது இளைஞன் ஒருவன் மோட்டார்சைக்கிளில் வந்த இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அரசடி வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவரும் ஓட்டோ ஓட்டுநருமான மனோகரன் பார்த்திபன் என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இச் சம்பவம் தொடர்பாக சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்ட மல்லாகம் நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு மானிப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (து-133)

## விசேட அதிரடிப்படையின்

# சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கிளைமோர்த் தாக்குதலில் பலி

(கண்டி)

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பயிற்சிப் பிரிவுப்பணிப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபுல் செனிவிரத்தின நேற்று கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவரது சாரதியும் இத் தாக்குதலில் உயிரிழந்தார்.

நேற்றுக் அதிகாலை 4.15 மணியளவில் அவர் தனது ரஜவெலவிலுள்ள வீட்டிலிருந்து மட்டுக்குறுள பொலிஸ் பயிற்சிக்கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்தபோது கண்டிடிகன எனும் இடத்தில் வைத்து அவரின் மீது கிளைமோர்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

படுகாயமடைந்த உபுல் செனிவிரத்தினவும், அவரது சாரதியும் கண்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோதிலும் காலை 6.20 மணியளவில் அவர்கள் இருவரும் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இக் கிளைமோர்த்தாக்குதல் பாடசாலை ஒன்றிற்கு அருகில்வைத்து மேற்கொள்ளப்பட்டதாகவும் வெடிக்காத நிலையில் இன்னொரு கிளைமோர் குண்டு மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறப்பு அதிரடிப்படையின் நட்சத்திர நாயகனாக வர்ணிக்கப்பட்டு வந்த உபுல் செனிவிரட்ன சிறப்பு அதிரடிப்படையின் இயக்குநர் நாயகமாக நிமால் லக்வேயை விட அதிரடிப்படையினர் மத்தியில் பிரபலமானவராகத் திகழ்ந்து வந்தார்.

கடந்த வருடம் வரை காரைதீவு சிறப்பு அதிரடிப் படை முகாமிலிருந்து செயற்பட்டு வந்த உபுல் செனிவிரட்ண அதிரடிப்படையின் பொலிஸ் அதிகாரியாக இருந்து பின்னர் கிழக்கிற்கான பொறுப்பதிகாரியாக பதவி உயர்வு பெற்றார். (10 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை—தென்னாபிரிக்க டெஸ்ட் தொடர்

# மஹேல ஜெயவர்த்தனவா; நிக்கி பொயேயா 2-வது போட்டியில் சாதிக்கப் போகிறார்கள்!



இலங்கை அணி 2-வது இனிங்சில் ஜெசூர்யாவின் அதிரடி ஆட்டத்தினாலும் அணித் தலைவர் ஜெயவர்த்தனாவின் பொறுப்பான ஆட்டத்தினாலும் 5 விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது.

இருனடிப்படையில் இலங்கை அணி வெற்றிக்கு குறைந்தளவு 90 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கள் மீதம் உள்ள நிலையில் 90 ஓட்டங்களைப் பெற வேண்டும்.

2 -வது இனிங்சில் தென்னாபிரிக்க அணி முரளிதரனின் சுழல் சூறாவளியில் 315 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் கிப்ஸ் 92 ஓட்டங்களையும் மார்க் பௌச்சர் 65 ஓட்டங்களையும் மற்றும் வில்லியஸ் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக முத்தையா முரளிதரன் ஏழு விக்கெட்டுக்களையும் மகரூப் ஒரு விக்கெட்டையும்வீழ்த்தினர்.

தொடர்ந்து 351ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பொடுத்தாடி வரும் இலங்கை அணி நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய சனத் ஜெயசூர்யா 74 பந்துகளில் 73 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தனா 77 ஓட்டங்களையும் விக்கெட் கீப்பர் பிரன்ன ஜெயவர்த்தன 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணியின்



சார்பாக நிக்கி பொயே மூன்று விக்கெட்டுக்களையும் நிர்னி, பொலக் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

எனவே இன்றைய ஆட்டத்தில் அணிகளின் வெற்றிக்கு மஹேல ஜெயவர்த்தனவா நிக்கி பொயேயா சாதிக்கப்போகிறார்கள்?

# மினி உலகக் கிண்ணத்தில் கங்குலிக்கு வாய்ப்பு குறைவு

## இந்தியக் கிரிக்கெட் சபைச் செயலர்

(மும்பை)

மினி உலகக் கோப்பை தொடருக்கான இந்திய அணியில் முன்னாள் அணித் தலைவர் சௌரவ் கங்குலிக்கு வாய்ப்புக கிடைப்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

உத்தேச அணியில் 20-22 வீரர்கள் மட்டுமே தேர்வு செய்யப்படுவார்கள் என இந்தியக் கிரிக்கெட் சபை திடீரென அறிவித்துள்ளது.

இந்தியா, அவுஸ்திரேலியா, இலங்கை உள்ளிட்ட 10 நாடுகள் பங்கேற்கும் மினி உலகக் கோப்பை கிரிக்கெட் (சம்பியன் டிராபி) எதிர்வரும் அக்டோபர் 7 ஆம் திகதி முதல் நவம்பர் 5 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இத்தொடரில் பங்கேற்றும் நாடுகள், வீரர்களின் உத்தேசப் பட்டியலை நாளைக்குள் அறிவிக்குமாறு சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதற்கான முப்பது பேர் கொண்ட உத்தேச அணியை இந்தியா அறிவிப்பதர்க இருந்தது. அதிக எண்ணிக்கை என்பதால் முன்னாள் அணித் தலைவர் கங்குலி இடம் பெறுவதற்கு வாய்ப்பு இருந்தது.

இந் நிலையில் உத்தேச அணியில் 20முதல் 22 வீரர்கள் மட்டுமே தேர்வு செய்யப் போவதாக இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பால் கங்குலி மீண்டும் அணியில் இடம்பெறுவது கேள்விக் குறியாகியுள்ளது.

இது குறித்து கிரிக்கெட் சபையின் செயலாளர் நிரஞ்சன் ஷா கூறியதாவது,


சம்பியன்ஸ் டிராபி தொடருக்கு 30 பேர் கொண்ட உத்தேச அணி தேவையற்றது. உலகக் கோப்பையைக் கருத்தில் கொண்டு 25க்கும் குறைவான வீரர்களையே தேர்வு செய்ய கிரிக்கெட் சபை முடிபு செய்துள்ளது.

தேர்வு செய்த அணி நாளை அறிவிக்கப்படும் தொடரில் பங்கேற்கும். 14 பேர் கொண்ட இறுதி அணி செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் அறிவிக்கப்படும்.

அணித்தேர்வு பயிற்சியாளர் கிரேக் சப்பல் முன்னிலையில் நடைபெறும் முன்னாள் அணித் தலைவர் கங்குலி அணியில் இடம் பெறுவாரா இல்லை என்பது குறித்துத் தேர்வுக் குழுவினர்தான் முடிபு செய்வர். இவ்வாறு நிரஞ்சன் ஷா கூறினார்.

இதேவேளை மினி உலகக் கோப்பைத் தொடருக்கான இந்திய அணியில் தமிழக வீரர் பாலாஜி இடம் பெறுவார் என எதிர் பார்க்கப்படுகின்றது. நெஹ்ராவும் அணியில் இடம் பெறுவோர் பட்டியலில் உள்ளார்.

# அகுரா கிளாசிக் டெனிஸ் தொடரில் இறுதிப் போட்டியில் ஷரபோவா -கிம் கிலிஸ்டர்ஸ்



(சாண்டியாகோ)

அகுரா கிளாசிக் டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவில் இறுதிப் போட்டியில் கிம் கிளிஸ்டர்ஸ்–ஷரபோவா மோதுகிறார்கள். முன்னணி வீராங்கனைகள் பங்கேற்றுள்ள அகுரா கிளாசிக் டென்னிஸ் போட்டி அமெரிக்காவிலுள்ள சாண்டியாகோ நகரில் நடைபெற்று வருகிறது.

இதன் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டம் ஒன்றில் பெல்ஜியம் வீராங்கனை கிம் கிலிஸ்டர்ஸ் செக் குடியரசு வீராங்கனை நிகேரலே வைடிசோவாவை எதிர்கொண்டார்.

இதில் கிம் கிளிஸ்டர்ஸ் 6-2;7-6 என்ற நேர்செட்டில் நிகோலே வைடிசோவாவை தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்.

*ஷரபோவா வெற்றி*

மற்றொரு ஆட்டத்தில் ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா சுவிஸ்லாந்து வீராங்கனை பட்டி ஷிண்டரை சந்தித்தார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் மரியா ஷரபோவா 7-5;6-4 என்ற நேர் செட்டில் பட்டி ஷிண்டரை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

# நீச்சலில் அமெரிக்க வீரர் ஹன்சன் உலக சாதனை

(இர்வின்)

அமெரிக்க நீச்சல் சம்பியன் சிப் தொடரில் பிரண்டன் ஹன்சன் 200 மீற்றர் பிரஸ்ட் ரோக் பிரிவில் புதிய உலக சாதனை படைத்தார்.

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவில் அமெரிக்க சம்பியன் சிப் தொடர் நடந்தது. இத் தொடரின் 200 மீற்றர் பிரட்ஸ்ரோக் பிரிவில் அமெரிக்க வீரர் பிரண்டன் ஹன்சன் போட்டி தூரத்தை 2 நிமிடம் 8.74 விநாடிகளில் கடந்து புதிய உலக சாதனை படைத்தார்.

முன்னதாக 2004 ஆம்ஆண்டு 2நிமிடம் 9.4 விநாடிகளில் போட்டி தூரத்தைக் கடந்து சாதனை படைத்திருந்தார். முன்னதாக இத் தொடரின் 100 மீற்றர் பிரஸ்ட்ரோக் பிரிவில் பங்கேற்ற பிரண்டன் 59.13 நிமிடங்களில் கடந்து உலக சாதனை படைத்திருந்தார்.

## விளையாட்டு செய்திகள் அமிர்தன்

# முத்தரப்புத் தொடர் திகதி அறிவிப்பு

மலேசியா, சிங்கப்பூரில் நடைபெறவுள்ள முத்தரப்புத் தொடருக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தியா, மேற்கிந்திய தீவுகள் மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் பங்குபற்றும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் மலேசியா , சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது.


ஏழு ஆட்டங்கள் கொண்ட இத் தொடரில் முதல் நான்கு ஆட்டங்கள் சிங்கப்பூரிலும் எஞ்சிய மூன்று போட்டிகள் மலேசிய தலைநகர் கோலாலம்பூரிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இத் தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் 12 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நடை பெறும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அட்டவணை வெளியிடப்படவில்லை.

இது பற்றி இந்தியக் கிரிக்கெட் சபையின் செயலர் நிரஞ்சன் ஷா நேற்று முன்தினம் கூறுகையில்,7 போட்டிகள் கொண்ட இத் தொடரின் அனைத்து ஆட்டங்களும் பகல் இரவாக நடைபெறும். மினி உலகக் கோப்பைக்கு முன்னர் இந்திய அணிக்கு இத் தொடர் சிறந்த பயிற்சியாக அமையும்.

மலேசிய, சிங்கப்பூர் கிரிக்கெட் சபைகளுக்குத் தேவைப்படும் உதவியை இந்தியா அளிக்கும். மீண்டும் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளும் அளவிற்கு சச்சின் முழு உடற் தகுதியும் பெற்று விட்டார்.

இலங்கையில் இரு பயிற்சி ஆட்டங்களில் இந்திய அணி பங்கேற்கவுள்ளதால் ஆடு களங்களுக்கு கேற்ப தங்களைத் தயார் செய்து கொள்ள போதிய அவகாசம் உள்ளது. இவ்வாறு நிரஞ்சன் ஷா தெரிவித்தார்.



அமெரிக்காவில் புகழ் பெற்ற மோட்டார் எக்ஸ் கேம்ஸ் போட்டியில் பிரிட்டிஸ் பிரிவில் திறமையை வெளிப்படுத்துகிறார் ஜிம்மெக் நீல். கலிபோர்னியாவில் உள்ள கார்சனில் சனிக்கிழமை நடைபெற்றது இப் போட்டி. முதல் சுற்றின் முடிவில் மெக்நீல் 4-வது இடத்தைப் பிடித்தார்.

## வருடாந்த மஹோற்சவம்



தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை பின் இரவு 1.40 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 8 மணிக்கு ஆவணி சதுர்த்தி விழாவும், செப்ரெம்பர் மாதம் 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும், 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு கைலாச வாகனமும், 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இந்திர விமானமும், 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 6ஆம் திகதி புதன் கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், 7ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத் திரு விழாவும் அன்று மாலை 5.30 மணிக்கு மௌனத்திருவிழாவும், 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு தொண்டர் பூசை விழாவும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (து-2)

# கல்லாறு சோதனை சாவடியில் 27 தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கல்லாற்றில் உள்ள இலங்கை இராணுவ முகாம் சோதனைச் சாவடியில் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட 27 இளைஞர்களையும் விடுதலைசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு அந்த இளைஞர்களது பெற்றோர் திருகோண மலை மனித உரிமை ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மூதூர் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களை 'அம் கோர்' என்ற நிறுவனம் திருகோண மலைக்கு 8 பேருந்துகளிலும் பார ஊர்திகளிலும் அழைத்துவந்த போது அல்லக்கந்த வீதியிலுள்ள கல்லாறு இராணுவ முகாம் சோதனைச் சாவடியில் அவ்வாகனங்களை மறித்துச் சோதனை நடாத்தப்பட்டது.

சோதனை நடத்திய இராணுவத்தினர் சந்தேகத்திற்கிடமான 27 தமிழ் இளைஞர்களை தடுத்துவைத்துக் கொண்டு மற்றவர்களைச்செல்ல அனுமதித்தது.

இந்த இளைஞர்களை இராணுவம் தடுத்துவைத்தபோது 'அம் கோர்' நிறுவனத்தின் பிரதிநிதி அவர்களை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்ட போதிலும் இராணுவம் அதற்கு இணங்கவில்லை. மூதூரிலிருந்து அழைத்து வரப்பட்ட மக்கள் இப்பொழுது திருகோணமலை புனித வளனார் கல்லூரி, புனித ஜோசப் கல்லூரி ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களிடமிருந்து இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் பெயர் விபரங்களை மனித உரிமை ஆணைக்குழுவினர் பெற்றுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் கந்தளாய்பொலிஸ்நிலையத்தில்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (து)

## குண்டுவெடிப்பில் ஒரு பொலிஸார் பலி

கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் கருணா ரத்னவின் வீட்டில் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெற்ற குண்டு வெடிப்பில் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரான பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார். பொலிஸ் சாரதி ஒருவர் காயமடைந்தார். (து)

## தண்ணீரைத் திறந்துவிட இராணுவம் தடை? போ.நி.க.குழுத் தலைவர் கவலை

'மாவிலாறு அணையைத் திறக்கலாம் என்ற நம்பிக்கையோடு நாங்கள் சென்றபோது அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் அங்கு செல்ல முடியவில்லை' எனப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித் துள் ளார்.

'தண்ணீரைத்திறந்து விடுவதை விடச் சிலருக்கு வேறு நோக்கங்கள் இருப்பதுபோல் தெரிகிறது. சிலர் தாங்கள் மேற்கொண்டுள்ள முடிவுகளை நடைமுறைப் படுத்துவதிலேயே குறியாக உள்ளனர் போல் தெரிகிறது.

எப்படி இருப்பினும் இந்த அணையத்திறப்பதற்கு நாங்கள் மேற்கொண்ட முயற்சிகைநழுவிப் போய் விட்டது. இது எங்களுக்கு ஏற்பட்ட தோல்வி அல்ல. தண்ணீரை எதிர் பார்த்துக் காத்திருக்கும் மக்களுக்கு ஏற்பட்ட தோல்வி இது.

இருப்பினும் இவ்விடயத்தில் நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்வோம். சிங்கள மக்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு சமாதான முறையில் மேற்கொள்ளக்கூடிய சகல நடவடிக்கைகளிலும் நாங்கள் ஈடுபடுவோம்' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# எரிபொருள் விலை மீண்டும் அதிகரிக்கும் பந்துல குணவர்த்தன எச்சரிக்கை

(கொழும்பு)

'எரிபொருட்களின் விலை இன்னும் இருவாரங்களில் மீண்டும் அதிகரிக்கவுள்ளதுடன் பாதுகாப்பு வரி நடைமுறையும் மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரப்படவுள்ளது. பெற்றோலின் விலை லீற்றருக்கு 105 ரூபாவாகவும், டீசலின் விலை லீற்றருக்கு 70 ரூபாவாகவும், மண்ணெண்ணெயின் விலை லீற்றருக்கு 60 ரூபாவாகவும் அதிகரிக்கப்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது' என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அதே வேளை முன்னர் அமுலிலிருந்து 2001ஆம் ஆண்டு எமது கட்சி ஆட்சிக்கு வந்த போது எம்மால் நீக்கப்பட்ட பாதுகாப்பு வரியையும் மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் ஆலோசித்து வருகிறது என்றும், அவர் தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எரிபொருள்களின் விலையை மீண்டும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. விலையை அதிகரித்துவிட்டு நாட்டின் பாதுகாப்பு நிலைமையைக் காரணம் காட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. மிக அண்மையில் தான் எரிபொருட்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டன. கடந்த மே மாதத்தைவிட ஜூன் மாதத்தில் உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை குறைந்திருந்தது. இருப்பினும் அரசாங்கம் எரிபொருள்களின் விலையை அதிகரித்தது. ஒரு வாடிக்கையாளர் ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 40 ரூபா வரி செலுத்துகிறார். அரசாங்கம் பாரிய நிதி நெருக்கடியில் இருக்கிறது.

இந்த மாதம் நடுப்பகுதியில் மட்டும் அரசாங்கம் 1500 கோடி ரூபாவைக் கடனாகப் பெற்றுள்ளது. இந்நிலை தொடர்ந்தால் நாடு படுகுழியில் விழும்நிலை வெகு தூரத்தில் இல்லை.

நிதி நெருக்கடிக்கு இதுவரை காலமும் எரிபொருளைக் காரணம் காட்டிவந்த அரசாங்கம் இனிவரும் காலத்தில் பாதுகாப்பு நிலையைக் காரணம் காட்டப் போகிறது' என பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார். (து)

## மோட்டார் சைக்கிள் அன்பளிப்பு

UNICEF நிறுவனத்தினால் சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் திணைக்களத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்ட 41 மோபெட் இன மோட்டார் சைக்கிள்கள் யாழ்.மாவட்டத்தில் கடமைபுரியும் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு வைபவரீதியாக வழங்கப்படவுள்ளன. இக் கையளிப்பு வைபவம் இன்று காலை 10.00 மணிக்கு பண்ணையில் அமைந்துள்ள சுகாதார கிராமத்தில் நடாத்தப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் அவர்களும் UNICEF நிறுவனத்தின் பிராந்திய பொறுப்பாளர் செல்வி யுவிற் புறுனர் அவர்களும் கலந்து சிறப்பிப்பார்கள். (து)

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(பொன்னாலை)

அராலி வள்ளியம்மைஞாபகார்த்த வித்தியாசாலையின் வருடாந்த நிறுவுனர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று செவ்வாய்க் கிழமை பி.ப. 2.00 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் கே.ஹரிஹர சக்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக மல்லாகம் மாவட்ட பதில் நீதிவானும் வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனத் தலைவருமாகிய ஆர்.வசந்த சேனன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக சங்கானைக்கோட்டக்கல்விப் பணிப்பாளர் எங்கரசு கலந்துகொள்வார். நிறுவுனர் நினைவுரையை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ்–ஞானச் சந்திரமூர்த்தி நிகழ்த்துவார். திருமதி பத்மினி வசந்தசேனன் பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். (து-49)

## வெளியீட்டு விழா

தமிழ்ச்செய்தித் தகவல் மையத்தின் 'புயலின் காகங்களும் மைனாக்களும்' என்ற சிறு கதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.கூட்டுறவுச் சங்க கேட்போர்கூடத்தில் யாழ்.பல்கலைக் கழக ஊடகவளம் மற்றும் பயிற்சி மையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை ஆசிரியர் துரைராசா ஸ்ரீவானந்தனும், ஆசியுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியமும், வெளியீட்டுரையை எஸ்.ரி.கணநாதனும் நிகழ்த்துவார்கள்.

மதிப்பீட்டுரையையாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம.இரகுநாதன் நிகழ்த்துவார். (து)

## இலங்கைக்கு மேலதிக கண்காணிப்புக்குழு

இலங்கைக்கு மேலதிக சர்வதேசகண்காணிப்புகுழுவினர்தேவை என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் என்றசர்வதேச அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. அந்த அமைப்பின் ஆசிய இயக்குநர் பிறட் ஆதம்ஸ் கூறியுள்ளதாவது,

'இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து வருவதாக சர்வதேச கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். தற்போதைய நிலையில் பொது மக்கள் வாழ்க்கை பாரிய சிக்கலுக்குள்ளாகி இருக்கிறது.

இது தொடர்பில் உரிய அரசாங்கங்கள் ஆலோசித்து மேலதிக கண்காணிப் பாளர்களை அனுப்ப நேரிடும்' என மனித உரிமைகள் கண்காணிப்பக ஆசிய இயக்குநர் பிறட் ஆதம்ஸ் தெரிவித்துள்ளார். (து-7)

## லெப்னானிலிருந்து திரும்பியவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

லெபனானில் தற்போது இடம்பெற்றுவரும் யுத்த சூழ்நிலை காரணமாக நாடு திரும்பியுள்ளவர்களை மீண்டும் வெளி நாடுகளில் வேலைக்கமர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

லெபனானிலிருந்து 3 ஆயிரத்திற்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் ஏற்கனவே தாயகம் திரும்பியுள்ளதாக பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் எல். கே.றுகுனுகே தெரிவித்துள்ளார்.

இவர்களில் அனேகமானவர்களிடம் கடவுச்சீட்டுகள் இல்லை. இடம்பெயர்ந்திருந்த மேலும் 246 பேர் நேற்றுக்காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளதுடன் மேலும் 250 பேரை ஏற்றிக்கொண்டு மற்றுமொரு விமானம் வரவுள்ளது. (து-9)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

வலிகிழக்கு பிரதேச செயலக மாநாடு மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டமும் அதனை தொடர்ந்து காலை 11.30 மணிக்கு பிரதேச விவசாய குழுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

சகல திணைக்களத் தலைவர்களும் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கப்பட்டுள்ளது. (து-9)



ஆவரங்கால், புத்தூர் பகுதியில் கொலைசெய்யப்பட்ட ஆட்டோச் சாரதி பா.கண்ணதாசனின் விபத்துக் காப்புறுதித் தொகை 6 இலட்சத்து 4065 ரூபாவினை இறந்தவரின் சகோதரன் கௌதமனிடம் ஜனசக்தி காப்புறுதி நிறுவன வடக்கு–கிழக்கு வலய சிரேஷ்ட விற்பனை முகாமையாளர் ஜே.சிறி விஜயகாந்தன் வழங்குவதையும், அருகே ஜனசக்தி நிறுவன பணியாளர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- துன்னாலை நிருபர்)

# இன்று ஒரு தகவல்

## அது எங்கே இருக்கிறது

ஒரு கடற்கரை ஓரம். அங்கே ஒரு சிறிய கிராமம். அந்தக் கிராமத்திலே ஒருசிறிய பாடசாலை. கடற்கரை ஓரத்திலே உள்ள ஒரு விடுதியிலே ஓய்வுக்காக ஒருவர் வந்து தங்கியிருந்தார்.

பாடசாலையிலே ஏதோ விழா நடக்கிற மாதிரித் தெரிந்தது. உடனே அவர் அந்தப் பக்கமாக வந்தார். இங்கே என்ன நடக்கிறது? என்று விசாரித்தார். பாடசாலை ஆண்டுவிழா நடக்கிறது என்றார்கள்.

உள்ளே போனார். கண்காட்சி ஒன்று வைத்திருந்தார்கள். பாடசாலையிலே படிக்கின்ற மாணவர்களே... சொந்தமாக தயார் செய்த பொருட்களை காட்சிக்கு வைத்திருந்தார்கள்.

அந்த ஊர் மக்கள் எல்லாம் அதைக் கூட்டம் கூட்டமாகப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இருவரும் ஆர்வமாக அதையெல்லாம் பார்த்துக் கொண்டு போனார். ஒரு இடத்திலே ஒரு சிறிய ரயில்செய்து வைத்திருந்தார்கள். மாணவர்களே தயார் பண்ணியது!

மின்சாரத்திலே அது ஓடுகிற மாதிரி செய்திருந்தார்கள். அதில் ஒரு சிறிய பொத்தான் இருக்கும். அதை அழுத்தினால் ரயில் ஓடும். சுற்றிச் சுற்றி வரும்.

மாணவர்கள் எதிரிலே நின்று விளக்கம் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். இவர் அதைக் கவனித்தார். ரயில் ஓடுவதைப் பார்த்தார். அங்கு நின்று கொண்டிருந்த மாணவர்களிடம் விளையாட்டாகக் கேட்டார்.

"இந்த ரயில் எதனாலே ஓடுது?" என்று கேட்டார். "சக்தியினாலே ஓடுது!" என்றார்கள் மாணவர்கள். "அது என்ன சக்தி?" என்றார். "அதற்குப் பெயர் 'மின்சாரம்' என்றார்கள். "நீங்கள் மின்சாரத்தைப் பார்த்திருக்கிறீர்களா?" என்றார்.

"நாங்கள் பார்த்ததில்லை... ஆனால் இதைச் செய்வதற்கு எங்களுக்கு உதவி செய்த ஆசிரியர் ஒருவர் தான் ஒருவேளை அவர் பார்த்திருக்கலாம்!" என்றார்கள். "அவர் எங்கே இருக்கிறார்?" என்றார். "இதோ அழைத்துக் கொண்டு வருகிறோம்" என்று சொல்லிவிட்டு ஓடிப் போய் அவரை அழைத்துக் கொண்டு வந்தார்கள்! அவரிடம் கேட்டார்.

"மின்சாரத்தை பார்த்திருக்கிறீர்களா?" என்று. "மின்சாரத்தைப் பார்க்கிறதாவது? நான் பார்த்ததே இல்லை..!

நான் பார்த்து செயல்படும் விதத்தைத்தான்! அது விளக்கை எரியச் செய்யும். ரயிலை ஓடும்படி செய்யும். இதே மாதிரி எத்தனையோ இயந்திரங்களைச் செயல்பட வைக்கிறது. ஆனால் உண்மையிலேயே அது என்னவென்று எனக்குத் தெரியாது.

ஒருவேளை இந்தப் பாடசாலை தலைமை ஆசிரியருக்குத் தெரிந்திருக்கலாம். ஏனென்றால் அவர் ஒரு மேல் நிலைப்பட்டதாரி!" அப்படி என்றார் அவர்.

சரி என்று போய் தலைமை ஆசிரியரை அழைத்துக் கொண்டு வந்தார்கள். அவரிடம் கேட்டார் இந்தக் கேள்வியை! இதற்கு அவர்...

"மன்னிக்கவேண்டும்... இந்தக் கேள்வியை இது வரைக்கும் யாரும் கேட்டதில்லை. சக்தியை யாரும் பாக்கமுடியாது...ஆனால் அது செயல்படும் விதத்தைத் தான் பார்க்கமுடியும்!" என்றார்.

இப்போது இதுவரைக்கும் கேட்டுக் கொண்டிருந்தவர் சிரித்தார். சிரித்துக் கொண்டு சொன்னார். "சரி அதற்காக ஒன்றும் கவலைப்படாதீர்கள் என்னுடைய பெயர் "தாமஸ் ஆல்வ எடிசன்" என்றார்.

இதைக்கேட்டதும் அங்கிருந்தவர்களுக்கெல்லாம் அதிர்ச்சி! ஆச்சரியம்.

"என்னது...நீங்கள் தானா எடிசன்? நீங்க எவ்வளவு மின்சாரக் கருவிகளை உண்டாக்கியிருக்கிறீர்கள்... நீங்களா இந்தக் கேள்வியைக் கேட்பது?" என்றார்கள்.

"ஆமாம்... நான் தான் கேட்கிறேன்... ஏனென்றால் நானே மின்சாரத்தை பார்த்தது கிடையாது!" என்றார் அவர். அன்பு என்பதும் இப்படிப்பட்டதுதான் என்கிறார். "ஓஷோ" அன்பு என்பது நமது உடற்கூறு அமைப்பிலே இல்லை...

அது நமது உடம்பிலே உள்ள சக்தியின் வெளிப்பாடு... அதை உணரத்தான் முடியும் பார்க்க முடியாது! "அன்பே உன்னை என் இதயத்திலே வைத்திருக்கிறேன்!" என்பான். இது டாக்டர்கள் சொல்கின்ற இதயம் இல்லை...அது இரத்தத்தை தள்ளுகிற ஒரு கருவி... அவ்வளவுதான். ஞானிகள் சொல்கின்ற இதயம் வேறு... அது கண்களுக்குப் புலப்படாத ஒரு சக்தி!

என்னுடைய இதயம் ரொம்ப விசாலமானது சார்! என்றார் ஒருத்தர். "அப்படியா?" என்றேன். ரொம்ப மரியாதையாக. "ஆமாங்க... டாக்டர் அப்படித்தான் சொல்கிறார். கொஞ்சம் வீங்கிப் போய் பெரிசாக இருக்கிறதாம் அப்படி என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மூதூரிலிருந்து 40 ஆயிரம் முஸ்லீம்கள் இடம்பெயர்வு
# மனிதாபிமான உதவிகள் வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

மூதூரிலிருந்து மொத்தம் 40 ஆயிரம் முஸ்லிம்கள் இடம்பெயர்ந்துள்ளதாக இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவ நடவடிக்கையால் பாதிப்புக்குள்ளான முஸ்லிம் மக்களை ரவூப் ஹக்கீம் மூதூர் பிரதேசத்தில் சென்று சந்தித்தார்.



இச்சந்திப்பையடுத்து மூதூரிலிருந்து மொத்தம் 40 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இப்பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாக இருப் பதாலும் தற்போது போர் நடவடிக்கைகள் நடைபெறுவதாலும் மனிதாபிமான உதவிகளைச் செய்யக்கூடிய அமைப்புக்கள் வந்தடைய முடிவதில்லை. மூதூர் -கந்தளாய் வீதியில் 64 ஆம் கட்டையில் கிராந்தி முனையில் இருக்கும் முஸ்லிம் உடல்களை எவரும் பெற்றுக்கொள்ள இயலவில்லை. அது விடுதலைப்புலிகளின் பகுதி. முஸ்லிம் மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப்பிரதிநிதிகளுடன் பேசியுள்ளோம். இருப்பினும் தற்போதைய நிச்சயமற்ற ஒரு சூழ்நிலையால் அந்த உதவிகள் கிடைப்பது சாத்தியமில்லாமல் உள்ளது.

முகாம்களிலும் பாடசாலைகளிலும் மக்கள் அளவுக்கு அதிகமாக அகதிகளாக குவிந்துள்ளன. தற்போதைய போரின் மூலம் ஸ்ரீலங்கா அரசாங்கமோ விடுதலைப்புலிகளோ எதுவித பயனையும் அடையப் போவதில்லை. முஸ்லிம் மக்கள் தான் பாரிய இழப்புக்குள்ளாகியுள்ளன என ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கந்தளாயில் ரவூப் ஹக்கீம்மை அமைச்சர் மஹிந்த சமரசிங்க சந்தித்துப்பேசினார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மங்கள சமரசிங்க தலைமைகளை விளக்கினார். முஸ்லிம் மக்களுக்கு உதவுவதற்காக மஹிந்த சமர சிங்க தலைமையிலான குழுவை இலங்கை அரசாங்கம் அமைத்துள்ளது.

அக்குழுவில் அரச சார்பற்ற நிறுவனங்கள், யு.என்.எச்.சி.ஆர், முஸ்லிம் சபைகளில் பிரதிநிதிகள், முஸ்லிம் பிரதேச அரச அதிபர்கள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அகதிகளை பதிவுசெய்யவும், ஒவ்வொரு முகாமிலும் மருத்துவப்பிரிவை ஏற்படுத்தவும் ஒழுங்குகள் செய் யப்பட்டுவருகின்றன. கந்தளாயில் மொத்தம் 14 முகாம்கள் உள்ளன என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் என். எம்.அமீன் கூறினார். இதனிடையே எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள 15ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையை ஒத்தி வைக்க வேண்டும் என்று அகதிகள் முகாம்களில் உள்ள பெற்றோர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

மேலும் சர்வதேச சங்கத்தின் 6 ட்றக் வாகனங்கள் இரண்டு நோயாளர் காவு வாகனங்கள் ஆகியவை சனிக்கிழமை மூதூர் சென்றடைந்திருப்பதாகத்தெரிவிக் கப்பட்டுள்ளது.

300 இடம்பெயர்ந்த குடும்பத்தினருக்கான வீட்டு உபகரணங்களும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினரால் வழங்கப்பட்டுள்ளது. தற்போது கந்தளாயில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பொறுப்பாளர் டூன் வான் டென் கொவ் அவசரமான மனிதாபிமான உதவிகளை செய்வதில் பாரிய சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றோம் அனைத்துத்தரப்பினரது உதவியும் எமக்குத்தேவை என்றார்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவுவது அனைத்து இலங்கையரது கடமை என்று மாவிலாறு அணைப் பிரச்சினையைமனிதாபிமான அடிப்படையில் விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் அணுகவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார். (கு)

# பிறந்த மண்ணுக்கு பெருமை சேர்த்த வலைப்பந்தாட்ட வீராங்கனை—
## மைதிலி இராசரத்தினத்துடன் ஒரு செவ்வி

இலங்கை பாடசாலை மட்ட வலைபந்தாட்டக் குழுவினர் அண்மையில் அவுஸ்திரேலிய உட்படப் பலநாடுகளுக்கு சென்று வெற்றி வாகை சூடி வந்திருக்கிறார்கள்.

இந்த வெற்றி அணியில் இலங்கை பூராவிற்கும்



பல நாடுகளுடன் வலைப்பந்தாட்டத்தில் கலந்து கொண்ட இலங்கை அணியைச் சேர்ந்த மைதிலி இராசரத்தினம்

தமிழ் வீராங்கனைகளாக சென்று வந்த சுன்னாகம் மைதிலி இராசரத்தினத்தைச் சந்தித்தேன். வலை பந்தாட்டத்துக்குரிய உடற்கட்டுடன் இருக்கும் அந்த வீராங்கனையிடம் தங்களுக்கு எப்படி இந்த அணியில் அங்கம் வகித்துச் செல்லச் சந்தர்ப்பம் கிடைத்தது என்று கேட்டபோது புன்சிரிப்புடன் மிக அமைதியாக சொல்லத் தொடங்கினார்.

"2005இல் நடைபெற்ற தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் தமது யூனியன் கல்லூரி 3ஆம் இடத்தினைப் பெற்றதாகவும் அதன் பேறாக எமது யூனியன் கல்லூரியிலிருந்து நானும் குணராசா நிலானியும் தேசிய மட்ட அணித் தேர்விற்காகச் சென்றோம். 30பேர் மட்டும் தெரிவு செய்யப்பட்டார்கள். திரும்பவும் ஒரு தெரிவு நடைபெற்றது. நான் உட்பட 24 பேர் தெரிவு செய்யப்பட்டோம். 23 சிங்கள மாணவிகளுடன் நானும் தெரிவு செய்யப்பட்டேன்.

இந்தத் தெரிவு எமது யூனியன் கல்லூரிக்கும் அதிபர் சு. புண்ணியசீலனுக்கும் விளையாட்டுத்துறை ஆசிரியர் திருமதி ஜெயந்தி ஜெயதரனுக்கும் கிடைத்த கௌரவமெனக் கருதுகிறேன். அதுமட்டுமல்ல நான் கல்வி கற்ற தந்தை செல்வா வித்தியாலயத்திற்கு சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயத்திற்கும் பெருமைசேர்க்கும் என நினைக்கிறேன்.

தெரிவு செய்யப்பட்ட எங்கள் 24பேருக்கும் தொடர்ந்து பயிற்சிகள் வழங்கப்பட்டன. இலங்கையின் பலபாகங்களிலிருந்து வந்த சக மாணவர்களுடன் சேர்ந்து பயிற்சி எடுத்தால் பலபுதிய அனுபவங்களையும் வலைபந்தாட்டத்தில் பல நுட்பங்களையும் பகிர்ந்துகொள்ளக் கூடியதாக இருந்தது"

தெரிவு செய்யப்பட்ட உங்கள் அணி பயிற்சியை முடித்துக் கொண்டு எந்த எந்த நாட்டு அணியினருடன் போட்டியிட்டீர்களென்பதை விபரமாகச் சொல்லும்படி கேட்ட



இலங்கை வல்லபந்தாட்ட அணியைச் சேர்ந்த மைதிலி இராசரத்தினம் அணியின் தோழியாரு டன்..

போது,

"இலங்கை பாடசாலை வலைபந்தாட் அணியினராகிய நாங்கள் பொறுப்பான ஆசிரியர்களுடன் புறப்பட்டோம். மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா முதலிய நாடுகளுக்கு சென்ற நாங்கள் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் சிநேகபூர்வ ஆட்டங்களில் கலந்து கொண்டோம். மலேசியாவில் பங்கு கொண்ட இரண்டு சிநேகபூர்வ ஆட்டங்களிலும் நாங்களே வெற்றிபெற்றோம்.

இதேவேளை, சிங்கப்பூரிலும் சிநேகபூர்வ ஆட்டத்தில் கலந்து கொள்ள ஏற்பாடாகியிருந்தது. அந்த ஆட்டத்திலும் நாங்கள் வெற்றியைத் தட்டிக் கொண்டோம்.

இலங்கையிலிருந்துஏ அணி, பி.அணிஎன இருஅணியினராக இந்தச் சுற்றுப் போட்டிக்காகச் சென்றிருந் தோம் என்பது குறிப்பிடத்தக்கது..

அவுஸ்திரேலியாவில் உத்தியோகபூர்வ ஆட்டங்களில் கலந்து கொண்டோம். இந்தப் போட்டியில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தாய்லாந்துத மலேசியா, கொரியா உட்பட பல நாட்டு அணியினருடன் போட்டியிட் டோம்.

மொத்தமாக 15 உத்தியோகபூர்வ ஆட்டங்களில் கலந்து கொண்ட நாம் 10 ஆட்டங்களில் வெற்றிகளைத் தட்டிக் கொண்டோம்" என்றார். யூனியன் கல்லூரியில் உயர்தர கலைப் பிரிவில் பயின்று வரும் மைதிலியின் எதிர்காலம் பற்றி கேட்ட போது என்னை இந்த நிலைக்கு உருவாக்கிய பெற்றோர், விளையாட்டுத்துறை ஆசிரியர், அதிபர் புண்ணியசீலன் ஆகி யோரது அன்பும், ஆதரவும் கிடைத்ததால் இந்த நிலைக்கு வந்துள்ளேன். நான் முதலில் ஒரு பட்டதாரியாக வேண் டும். அதேவேளை வலைபந்தாட்டத்தில் பல வெற்றி களை பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எனக்குண்டு எனத் தெரி வித்தார்.

யாழ். மாவட்ட வலைபந்தாட்ட அணியில் இருப்பதாகத் தெரிவிக்கும் இவர் அணியின் பொறுப்பாளர் திருமதி ரூபசிங்கத்தின் ஆதரவும் தனக்கு மிக உதவியாக இருந்ததெனக் கூறினார்.

செவ்வி கண்டவர்:- கலாபூஷணம் சு.துரைசிங்கம்

# மரபுவழி ஆலயங்களின் மாண்பு

எங்கெங்கு ஓர் உண்மையான ஆன்மீக சாதுவின் சமாதியிருக்கிறதோ அங்கிருக்கும் திருக்கோயில்கள் அருள் சுரக்கும் சிறந்த ஞானப் பீடமாக மாறும் எனக் கூறப்படு [illegible] சுவாமிகளின் சமாதி [illegible]த்திலும், இஸ்லாமிய மத [illegible] சமாதி நல்லூர் கந்த சாமி கோவிலிலும் மற்றும் ஒரு ஞான குருவின் சமாதி செல்வச் சந்நிதி [illegible] உள்ளது என்பது நாம் எல்லோரும் அறிந்ததே.

இங்கெல்லாம் அடியார்கள் [illegible] துயரம் தீர சாந்தியடைய ஆயிரக்கணக்கில், இலட்சணக்கணக்கில் உற்சவகாலங்களில் படை எடுக்கிறார்கள்.

தற்போதைய ஸ்திரமற்ற சமூகப் பொருளாதார அரசியல் சூழ்நிலையால் அடியவர்கள் கதிர்காமத்திற்கு முன்புபோல் செல்ல இயலாதிருப்பதினைக் கருத்திற்கொண்டு அவர்களின் நன்மைகருதி முன்னால் நல்லூர் கநதசாமி கோவிலின் பிரதான குரு காலஞ்சென்ற [illegible] சாமிக் குருக்கள் அவர்கள் நல்லூர் பால கதிர்காமத்தை நிறுவ திட்டமிட்டனர் அதன்படி இன்றுவரை சிறப்பாக வருடந்தோறும பால கதிர்காம உற்சவமும் இறுதி நாட்களில் தேர், வேல் நவவீரர்களின் வீதியுலாவும் தீர்த்தமும் சிறப்பாக நடைபெறுகிறது.

இவ் வருடம் ஆவணி 10, 11, 12 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கிறது. கதிர்காமம் செல்ல இயலாத அடியார்களின் குறை இதனால் தீர்ந்தது.

யார் இந்த நவவீரர்கள் ஆணவம், கன்மம், மாயையும் திருவுருவங்களான தாரனன், சிங்கன், சூரன் தேவர்களை சிறையில் அடைத்தபோது எல்லாம் வல்ல சிவ பெருமான் முருகப்பெருமானை உருவாக்கி அவருக்கு உதவ தளபதி வீரபாகுதேவரின் தலைமையில் இந்த நவவீரர்களை ஒழுங்குபடுத்தி அமைத்துக் கொடுத்தார். வீரபாகுதேவர் மகேந்திர புரத்தில் இருந்த சூரனின் அரண்மனைக்குச்சென்று அவனின் ஆணவத்தை அடக்கி'பின்பு சூரன் போரை நவவீரர்களின் உதவியுடன் வேலனுக்குத் துணை நின்ற தேவர்களை விடுவித்தார் என்பது வரலாறு. கச்சியப்ப சிவாச்சாரியார் முதன் முதலில் எழுதிய கந்தபுராணத்தில் இதற்கு ஆதாரம் உள்ளது.

அந்த நவவீரர்களின் நினைவாகத்தான் பாலகதிர்காமத் தெரு உலாவில் வேலுடன் இந்த வீரர்களின் திருவுருவங்கள் எடுத்து வரப்படுகிறது. ஒட்டக்கூத்தன் திரியம்பக சோழனின் காலத்தில் வாழ்ந்த கொற்றவன்குடி முதலியென அழைக்கப்படும் உமாபதிசிவாச்சாரியார் மிக சமீபகாலம் வரை திறமையாக அருள் உரையாற்றிய திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் நவவீரர்களின் பரம்பரையில் உதித்தவர்கள். எம்மத்தியில் வாழ்ந்தவர்கள். இவர்களின் வழித் தோன்றல் தாங்கள்தான் அன்று தொடக்கம் இன்றுவரை பஞ்சபூதஸ் தலங்களில் அடங்கும் சிதம்பரம், காஞ்சி போன்ற கோவில்களுக்கும் மற்றும் மதுரை மீனாட்சி அம்பாள் ஆறுபடை வீடுகள் உட்பட்ட பல பிரபல்யமான கோவில்களுக்கும் கொடிஏற்றத்தில் அன்று கொடிச் சீலை கொடுக்கின்றார்கள்.

அது மட்டுமல்லாது அந்தப் பாரம்பரியத்தில் எமது ஈழவள நாட்டிலும் நல்லூர் கந்தசாமி கோவில் வல்லிபுர ஆழ்வார் கோவில் ஆகியவற்றிற்கு பற்பல ஆண்டுகளாக இன்றுவரை கொடிச்சீலை கொடுக்கிறார்கள். அதன் நினைவாக சூரன் போர் அன்று முடிகாரர்களாக வேடந்தாங்கி முருகப்பெருமானுக்கு முன் அணி வகுத்து செல்வார்கள். சோழ சாம்ராச்சியத்தில் இவர்களுக்கு என ஒரு தனிப்படை இருந்தது. சரித்திர உண்மை. இவ்வாறு வரலாற்றுச் சிறப்புமிக்க சம்பவங்களை நினைவு [illegible] நல்லூர் பால கதிர்காம உற்சவம்.

உலகுடையோன்

# விஷமிகளின் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் குப்பைத் தொட்டிகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், நல்லூர் மூத்த விநாயகர் ஆலயத்துக்கு அண்மையில் குப்பைத் தொட்டிகளை நிறுவுவதற்காக அமைக்கப்பட்ட அடித்தளம் சில விஷமிகளால் சேதமாக்கப்பட்டதால் அவ்விடத்தில் குப்பைத்தொட்டிகள் அமைக்கப்படவில்லை.

இதனால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் தத்தமது வீடுகளில் சேரும்கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்த முடியாது மிகவும் கஷ்டப்படுவதாகத்தெரிகிறது. (து-75)

# இராசி பலன்

**08.08.2006**
**(ஆடி 23, செவ்வாய்க்கிழமை)**
**சதுர்த்தசி முன்னிரவு 7.33 மணிவரை**
**உத்தராடம் முன்னிரவு 8.17 மணிவரை**
**இராகுகாலம் 3.04-4.34 மணிவரை**
**சுபநேரம் 10.34-12.04 மணிவரை**
**பட்டினத்தார் குருபூசை**

| | |
|---|---|
| மேடம் | அதிகாரம், எடுத்த கருமங்கள் கைகூடும், தூரதேசச் செய்தி, தேகநலன். |
| இடபம் | புதியதிட்டமிடல், கட்டுப்பாடு, திடீர் பயணம், சரீரப்பிரயாசை. |
| மிதுனம் | எதிர்பாராத அச்சம், காரியதடங்கல், ஆரோக்கியக்குறைவு, போசனசுகம். |
| கடகம் | குடும்ப சுகம், காரிய அனுகூலம், விருந்துபசாரம், நல்லசெய்தி. |
| சிங்கம் | தொழில் நன்மை, தேகநலன், அதிகாரம், முயற்சி கைகூடும். |
| கன்னி | வியாபார விருத்தி, உடல்நலக்குறைவு, மனக்கவலை, காரிய தாமதம். |
| துலாம் | தாய்வழி உறவு, சுபநிகழ்வு, முயற்சி தாமதம், மனப்பயம். |
| விருச்சிகம் | கூட்டுமுயற்சி, அன்னியர் சந்திப்பு, போசனசுகம், தேகநலன். |
| தனுசு | வீண்பகை, காரியதடங்கல், பணவிரயம், மரியாதைக் குறைவு. |
| மகரம் | நல்லமுயற்சி, நண்பர்கள் சந்திப்பு, கற்பனை மிகுதி, சயனசுகம். |
| கும்பம் | காரிய அலைச்சல், சுபசெலவு, வேலைச் சுமை, மனச்சோர்வு. |
| மீனம் | தனலாபம், மனமகிழ்ச்சி, காரியசித்தி, கௌரவமான நிலை. |

- வளவன்

# தங்களால் முடியும் என்பது எமது நம்பிக்கை

## நோர்வே விஷேட தூதருக்கு கடிதம்

இலங்கையில் நீடித்துவரும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதற்கான அனுசரணையாளர்களாக நோர்வே அரசு செயற்பட்டுவருவதையிட்டு இலங்கை மக்கள் நோர்வே அரசுக்கு நன்றிக் கடன்பட்டவர்களாக இருக்கிறார்கள் என சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு நோர்வே சிறப்புத் தூதர் ஹென்சின் பேயருக்கு அனுப்பிய கடிதமொன்றில் தெரிவித்துள்ளது.

'தற்பொழுது யுத்தநிறுத்த ஒப்பந்தம் வெறும் கடுதாசி எழுத்தாகவே காணப்படுகிறது. தற்பொழுது கிழக்குப் பிரதேசத்தில் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையே நடைபெற்றுவரும் மோதல், பேச்சுவார்த்தை, உடன்பாடு, நம்பிக்கை ஆகியவற்றை பெருமளவுக்குக் குறைத்துவிட்டது. இது வெறுப்பையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஒன்றுபடுதலுக்கும் சேர்ந்து வாழதலுக்கும் பதிலாக அதிகாரம், பிரிவினைக்கும் ஒற்றுமையீனத்துக்குமே பயன்படுத்தப்படுகிறது.

தங்களது இலங்கை வருகை எம் மத்தியில் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது. இரு பகுதியினரையும் பேச்சு மேசைக்கு அழைத்து வந்து சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பித்து வைக்கவும். தற்போதைய மோதலுக்கு முடிவு கட்டவும் தங்களால் முடிவும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.


சமஷ்டி அடிப்படையில் அர்த்தமுள்ள அதிகாரப்பரவலாக்கல் மூலம் சமாதானத்தை நிலைநாட்ட முடியும் சமத்துவம், சட்டத்தின் முன் சம பாதுகாப்பு ஆகிய அடிப்படை உரிமைகள் மீறப்படலாகாது' என அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# விளையாட்டு விழா

கோண்டாவில் மேற்கு தமிழ் வேதபாராயண சன சமூக நிலைய முன்பள்ளியின் ஐந்தாவது விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணிக்கு கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நிலையத் தலைவர் தா.தியாகமூர்த்தி J.P தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்துகொண்டார் சிறப்பு விருந்தினர்களாக எஸ்.சண்முககுமார், கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் எஸ்.சண்முகதாஸ், நல்லூர் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கே.சிவ சோதி, கோண்டாவில் இந்துமகாவித்தியாலய முன்னாள் அதிபர் செல்வி பா.மார்க்கண்டு, முன்னாள் கிராமசேவையாளர் செ.ஸ்ரீஸ்கந்தராஜா, கோண்டாவில் கிராம சேவையாளர் எம்.தயாபரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (து-104)

# நல்லூரான் திருவடிக்கு இன்று மஞ்சத் திருவிழா




## தங்கவொளி வீசு மஞ்சமுறை வேலா!

தங்கவொளி வீசுகின்ற மஞ்சமதன் மேலே
எங்கள்குகன் ஏறிவரும் காட்சிதனைக் கண்டே
பண்ணுடனே திருமுறைகள் பாடியேபின் வருவார்
எண்ணமெல்லாம் பறிகொடுத்து அகங்குழைந்து நிற்போம்!

தஞ்சமென நாடிவந்து திருநல்லூரில் கூடி
விஞ்சுபுகழ் வேல்வரை மனமுருகித் தொடுவார்
மஞ்சமதைத் தொட்டிழுக்கும் தொண்டு செய்துதேவி
குஞ்சரியின் நாயகனை ஏத்திப் போற்றித் தொழுவோம்

கவிமணி கந்தமுருகேசதாசனார்.

## மஞ்சத்தில் வருகிறான்



தஞ்சமென புகுந்தவரைக் காக்க வருகிறான்
தமிழ்க்கடவுள் நல்லையிலே பவனி வருகிறான்
அஞ்சேலென அபயமளிக்க வருகிறான்
அயில்வேலன் நல்லையிலே வருகிறான்
குஞ்சரியர் சகிதமாய் வருகிறான்
குமரன் நல்லையிலே வருகிறான்
வெஞ்சமரை நிறுத்த வருகிறான்
வேலன் நல்லையிலே வருகிறான்
பஞ்சம் பிணி போக்க வருகிறான்
பார்வதிமைந்தன் நல்லையிலே வருகிறான்
எந்தையும் தாயுமானவன் வருகிறான்
எங்கள் வாழ்வுக்கு வழிகாட்ட வருகிறான்!

மதுரகவி.காரை.எம்.பி அருளானந்தன்

## மஞ்சத்தில் பவனி வா!



அலங்காரக் கந்தனென உனக்கு பெயர்
கலங்காமல் சூரனுடன் செய்தாய் சமர்
அழகிற்கு உனக்கிங்கு யார்தான் நிகர்
அமர்ந்திருப்பாய் யாழ்ப்பாண நல்லை நகர்!

அஞ்சுதலை போக்கிவிடும் ஆறுமுகனே
தஞ்சமென வருபவரை காப்பவனே
நெஞ்சார நினைப்பவருக்கு நீயே துணை
மஞ்சத்தில் பவனிவாராய் மகிழ்வுடனே!

வி. கார்த்திகா அல்வாய்

## தெய்வீகத் தீர்வு தா!

நல்லூரான் வீதியிலே நல்லெழில் மஞ்சத்திலே
நல்முத்துக் குமரா வா நீ தெய்வானை வள்ளியோடு
பொல்லாத சூரரை வென்றே பூமியைக் காத்தவரேவா
போரினை வென்றே சமாதானம் பூரப்பிட வாமுருகா!
தொல்லூரின் சோகத்தினை தீதிலாவேல் மாற்றியேவா
தெய்வீகம் வாழஇங்கு தமிழ்த் தெய்வமே வாநீ
தொல்லையிலா வாழ்வுதாநீ தெய்வீகத் தீர்வுதாநீ
தமிழரின் துயர்தீர தெய்வக் குமரா காப்புநீ

நல்லூர் சிவ முருகன் என்-தமிழ்மகன்

# நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நல்லூர் உற்சவ கால பத்தாம் நாள் நிகழ்வான 'ஆன்மீக சிந்தனையுடன் கூட்டுப் பிரார்த்தனை' நிகழ்வு இன்று பி.ப 3 மணிக்கு நாவலர் மணிமண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் 'தொண்டர் தம் பெருமைபேசவும்பெரிதே' என்னும் தலைப்பில் செஞ்சொற் செல்வன் இரா.கேதீஸ்வரன் உரை நிகழ்த்துவார். ஏழாலை, தெல்லிப்பளை துர்க்கையம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்களது, கூட்டுப்பிரார்த்தனையும்இடம்பெறும். (து-133)

# கணினிக் கல்விப் பகுதி


## தமிழில் மின்னஞ்சல் அனுப்பும் முறை (13)


தமிழ் மொழியிலே மின்னஞ்சல் அனுப்புவதற்கென்றே தனியாக இணையத்தளம் இருக்கிறது. www.tamilanjal.com என்பது தான் அதன் முகவரி, ஆங்கில மொழியில் மட்டும் தான் இமெயில் அனுப்பலாம் என்றில்லை. நம் தாய் மொழியிலே அனுப்பிக் கொள்ளலாம்.

இணையத்தில் இணைந்து Internet Explorer ஐ அல்லது Netscape Browser ஐ திறந்து அட்ரஸ் பாரில் தமிழ் அஞ்சலின் இணையத்தள முகவரியை டைப் செய்துவிட்டு Go என்பதை கிளிக் செய்யவும். அல்லது கீபோர்ட்டிலுள்ள என்டர் கீயை அழுத்தவும். இப்பொழுது தமிழ் அஞ்சலின் இணையத் தளம் அதாவது ஹோம் பேஜ் லோடாகிவரும். பின் தமிழ் அஞ்சலின் பக்கத் தில் பல வகையான விசைப் பலகை வடிவமைப்புக்கள் காணப்படும். அது மட்டுமல்ல தமிழ் அஞ்சலை எப்படி பயன்படுத்துவது (How to use?) எனப் பல்வேறு தொடுப்புக்கள் (Link) கொடுக்கப்பட்டிருக்கும். இவற்றைக் கிளிக் செய்து வழிமுறைகளை அறிந்து கொள்ளலாம்.

இனி தமிழில் இமெயில் அனுப்பும் முறையை பார்ப்போம். தமிழ் அஞ்சலின் ஹோம் பேஜ்ஜில் தரப்பட்டுள்ள கீபோர்ட் வகைகளில் காணப்படும் Type Writer Layout என்பதை கிளிக் செய்யவும். இப்பொழுது இமெயில் அனுப்பு வதற்கான Compose பகுதி தோன்றும். இதில் உங்களது பெயர், இமெயில் முகவரி மற்றும் பெறுவோரின் பெயர், பெறுபவர் இமெயில் முகவரி மற்றும் பொருள் (Subject) ஆகியவற்றை உரிய இடங்களில் இட்டு செய்தியையும் ரைப் செய்து விட்டு அனுப்பு (Send) என்ற பட்டனைக் கிளிக் செய்தவுடன் தமிழ் அஞ்சல் மெயில் உரியவரிடம் மெயில் கிடைத்துவிடும். அழகு தமிழிலே செய்தி காட்சியளிக்கும். இச்சேவையானது முற்று முழுதாக இலவச சேவையேயாகும்.

தமிழ் அஞ்சல் மூலமாகத்தான் தமிழில் இமெயில் அனுப்பலாம் என்றில்லை. பல





தளங்கள் இலவசமாகவும், கட்டணம் வசூலித்துக் கொண்டும் இச்சேவையை வழங்குகின்றன. முரசு அஞ்சல் மற்றும் குறலி போன்ற மென்பொருட்கள் மூலமாகவும் தமிழில் இமெயில் அனுப்பிக்கொள்ளலாம்.


## எமது குரலை கணினியில் பதிவு செய்வது எப்படி?

இதற்கு எம்மிடம் மைக் கூடன் கூடிய ஹெட்போன் தேவை.

குரலை பதிவு செய்யும் முறை :

ஹெட்போனை சரியாக பொருத்திய பின் Start – All Program – Accessories – Entertainment – Sound Recorder என்பதை கிளிக் செய்யவும். தற்பொழுதுவரும் டயலொக் பொக்ஸில் Record [●] என்பதை கிளிக் செய்த பின் குரலை பதிவு செய்த பின் Stop ஐ கிளிக் செய்து கணனியில் சேவ் செய்து கொள்ளலாம்.






### USB இன் சிறப்புப் பண்புகள்

- 130 கருவிகள் வரை ஒரு கணினியில் யூ.எஸ்.பி மூலம் இணைக்க முடியும்.
- கூடுதல் வேகம் மற்றும் எளிய வடிவமைப்பு.
- நீண்ட காலம் பயன்படுத்தக் கூடியது. பழுதடையும் வாய்ப்பு மிக மிகக் குறைவு.
- விரிவுபடுத்தப்பட்ட Hub வசதி.
- கணினி இயங்கிக்கொண்டிருக்கும் போதே டிவைஸை இணைக்கலாம், துண்டிக்கலாம்.
- டிவைஸ்களை இணைத்ததும் இயங்க ஆரம்பித்துவிடும்.
- சிறிய கருவிகளுக்கு யூ.எஸ்.பி மூலம் மின்சாரம்.

### USB உடன் இணைக்கக்கூடிய டிவைஸ்கள்

Flash Drive, Digital Camera, Hand phone, Mouse, Modem, Printer, Scanner, Joystick, Web Camera, Bar Code Reader, Zip Drive, Keyboard, Speaker, Network, Finger Print Scanner எனப் பல கருவிகளை இணைக்க முடியும்.

USB ன் விரிவாக்கம் Universal Serial Bus

## வழிகாட்டல் குறிப்புக்கள்

**o Computerized Accounting Package**

நிறுவனக் கணக்குகளை கணினி மூலம் இலகுவாக செய்யக் கூடிய வசதியை தருகிறது இக்கற்கை. பல Accounting மென்பொருட்கள் இருந்தாலும் அவற்றில் ஒரு சில மென்பொருட்களுக்கே அதிக கேள்வி (Demand) நிலவி வருகிறது. கணக்கியல் துறையில் ஆர்வமுள்ளோர் இக்கற்கை நெறியை மேற் கொள்ளலாம்.

Accounting Package ல் பிரதானமானவையாக MYOB, Quick Book, Tally, Acc pack ஐ குறிப்பிடலாம். அதிலும் தற்பொழுது அதிக மாணவர்கள் கற்பது Tally ஐயேயாகும்.

**o Internet & E-Mail**

இக்கற்கைநெறியை பெரும்பாலும் எம்.எஸ். ஒபீஸ் கற்றால் இலவசமாக கற்பிக்கப்படும். (ஒரு சில நிறுவனங்களில் மாத்திரம்) ஆனால் தனியாக Diploma in Internet & E-Mail பாடநெறியை ஒரு வாரத்தில் அல்லது இரு வாரங்களில் கற்றுக் கொள்ள முடியும். இப்பாடநெறியில் பிரதானமாக இமெயில் முகவரி உருவாக்குவது எப்படி?, இமெயில் ஒன்றை தயாரித்து அனுப்புவது மற்றும் வந்துள்ள மெயிலை பார்வையிடும் முறை, இணையத் தளத்தை பார்வையிடும் முறை போன்றன கற்பிக்கப்படும். இக்கற்கையை ரூபா. 1000 முதல் 1500 ரூபாவுக்குள் கற்க முடியும்.

பக்க வடிவமைப்பு :



கே.ரி.சாரங்கன்
கொக்குவில் இந்துக் கல்லூரி
E-Mail : kt.sarangan@gmail.com

## கேள்வி – பதில் பகுதி

கேள்வி :

வலம்புரியில் (20.06.2006) விளக்கியிருந்த கட்டுரையின் படி நான் இணையத்தில் Actor Vijiey எனத் தேடிய பொழுது படம் வரவில்லை. என்ன காரணம்?

தே. அசோக்குமார்
கொக்குவில்

பதில்:

நீங்கள் தேடல் பொறியில் Image என்பதை Select செய்துவிட்டு Actor Vijay எனக் கொடுத்தால் கட்டாயம் படம் வந்திருக்கும். ஒரு எழுத்துப் பிழையென்றாலும் தேடல் இயந்திரம் பிழையெனக் காட்டிவிடும். இதோ நான் தேடிய போது படம் வந்தது. உங்களுக்கு படம் வராததற்கான காரணம் என்ன தெரியுமா? நீங்கள் Vijay என்பதற்கு பதிலாக Vijiey எனக் கொடுத்துவிட்டீர்கள். அது தான் படம் வரவில்லை.




## வாரம் ஒரு இணையத்தளம்


www.download.com இத்தளமானது எமக்குத் தேவையான சகல மென்பொருட்களையும் முற்றிலும் இலவசமாக எமது கணனியில் நிறுவிக் கொள்ள லாம். பல பயனுள்ள சொப்ட்வெயார்கள் இருந்தாலும் எல்லாவற்றையும் பதிவிறக்கி, கணனியின் வேகத்தை குறைப்பதை விட, சில முக்கியமான அவசியமான மென்பொருட்களை மட்டும் இத்தளத்திலிருந்து பதிவிறக் கிக் கொள்ளுங்கள். பயமின்றி இத்தளத்திலிருந்து மென்பொருட்களை பதிவிறக்கலாம்.

கணினிப் பயனாளர்கள் அனைவரும் விசிட் செய்து பார்க்க வேண்டிய தளமே www.download.com ஆகும்.

# கர்மவீரர் காமராஜர்

முருக-தனுஷ்கோடி

## மீள்பார்வை 48



### அகில இந்திய காங்கிரஸ் தலைவர்

நேருஜியின் ஆசை 3மாதம் கழித்து நிறைவேறியது. அகில இந்திய காங்கிரஸ் தலைவராக காமராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதலில் சேலம் விஜயராகவாச்சாரியும் பிறகு எஸ்.ஸ்ரீனிவாச ஐயங்காரும் அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களாக இருந்தார்கள். அதன் பிறகு அகில இந்திய காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றாவது தமிழர் காமராஜ்தான்.

அகில இந்திய காங்கிரஸின் தலைவராக காமராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த இந்தக் காலகட்டத்தில் காங்கிரஸ் பிறந்த வரலாறு எப்படி என்பதை எழுதுவது பொருத்தமாய் இருக்கும் என நினைக்கிறேன். ஏனெனில் காங்கிரஸே தமிழகத்தில் தான் பிறந்தது என்பது பலருக்குத் தெரியாது!

சென்னையில் கலெக்டராக இருந்த திவான்பகதூர் ரகுநாதராவ் வீட்டில் 1884 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி ஒரு பூர்வாங்கக் கூட்டம் நடைபெற்றது. ஏ.ஓ. ஹயூம் என்ற மேனாட்டுக்காரர் யோசனையின் பேரில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபை தோன்றுவதற்குக் காரணமாய் இருந்தவர் ஹயூம் என்னும் இவர் தான்.

பூர்வாங்கக் கூட்டத்தில், டாக்டர் சர் சுப்பிரமணிய ஐயர், பனப்பாக்கம் ரங்காசார்லு, எழும்பூர் ரங்கைய நாயுடு, சுரேந்திரநாத், பானர்ஜி, மன்மோகன் கோஷ், தாதாபாய் நௌரோஜிவாமன் நாராயண மண்டலிக், காசிநாத் திரயம்பக் திலங் ஆகியோரும் மற்றவர்களும் கலந்துகொண்டனர்.

நாட்டு முன்னேற்றத்திற்கு மிகவும் உண்மையுடன் பாடுபடுவோர் எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்திக் கொண்டு ஒவ்வொரு ஆண்டில் செய்யத் தகுந்த அரசியல் முயற்சிகளை விவாதித்து நிச்சயித்தல் என்ற விஷயம் பூர்வாங்கக் கூட்டத்தில முடிவு செய்யப்பட்டது. 1885ஆம் ஆண்டில் புனாவில் கூடுவது என்றும் அதற்கு எல்லோருக்கும் அழைப்பு அனுப்புவது என்றும் அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பம்பாயில் உள்ள கோகுல்தாஸ் தேஜ்பால் சமஸ்கிருத கல்லூரியில், 1885ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆம் திகதி நண்பகல் 12.15 மணிக்கு முதல் காங்கிரஸ் கூடியது. இந்த முதல் காங்கிரஸுக்கு நாடெங்கிலும் இருந்து 72 பிரதிநிதிகளும் 50 பத்திரிகை நிருபர்களும் போய் இருந்தார்கள். சென்னையில் இருந்து பிரபல தலைவர்களும், "சுதேசமித்திரன்" "இந்து" பத்திரிகைப் பிரதிநிதிகளும் இந்தக் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். தாதாபாய் நௌரோஜி எல்லோரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். டபிள்யூ சி.பானர்ஜி இந்த முதல் காங்கிரஸுக்குத் தலைமை தாங்கினார். வங்காளிக் கிறிஸ்தவரும் பாரிஸ்டருமான இவர் பெயரை ஏ.ஓ ஹயூம் முன்மொழிந்தார். டாக்டர் சர் மணி ஐயர் வழிமொழிந்தார். பலத்த ஆரவாரத்துக்கிடையே தலைவர் ஆசனத்தில் பானர்ஜி அமர்ந்தார். அகில இந்தியக் காங்கிரஸின் முதல் தலைவர் இவர்தான்.

இந்தியாவின் முன்னேற்றத்திற்கு உழைப்போர் நெருங்கிப் பழகி வரவேண்டும். ஜாதி, மதம், நிறம், மாகாணம் முதலிய பிரிவுகளைப் பொருட்படுத்தாது தேச சேவையில் ஈடுபடுவது எல்லாப் பிரச்சினைகளையும் முழு விவாதத்துக்குப் பின் பெரியோரின் கருத்துக்களைத் தேசிய அந்தஸ்தில் பதிவு செய்து வைப்பது காங்கிரஸ் கூடிய பிறகு தேசியவாதிகள் செய்யவேண்டிய வேலைகளை நிர்ணயிப்பது ஆகியவையே காங்கிரஸின் நோக்கங்களாகும்.

பம்பாயில் கூடிய இந்த முதல் காங்கிரஸில் முதல் தீர்மானத்தை முன்மொழியில் பாக்கியம் சுதேசமித்திரனைத் தமிழ்நாட்டுக்கு அளித்தவரும் தேசபக்தருமான ஜி.சுப்பிரமணிய ஐயரைச் சேரும்.

பிரிட்டிஷாரை நாட்டில் இருந்து வெளியேற்றி விடுதலை வாங்கித் தந்தது இந்தக் காங்கிரஸ் மகாசபைதான். ஓட்டுரிமையையும் தந்து உலக அரங்கில் பாரத நாடும் அங்கம் வகிக்கக் காரணமாய் இருந்தது இந்தக் காங்கிரஸ் தான்.

இந்தக் காங்கிரஸின் முதல் தலைவர் டபிள்யூ சி. பானர் ஜி. தொடர்ந்து ஜார்ஜ் யூல் அனந்தாசர், தாதாபாய் நௌரோஜி, வில்லியம் வெட்டர்பர்ன், வெட், பத்ருதின் தயாப்ஜி, பி.எஸ்.மேத்தா, லால் மோகன் கோஷ், சங்கரன் நாயர், சந்திரவார்கர் காட்டன், ஆனந்த மோகன், வாச்சா, கோபாலகிருஷ்ண கோகலே, ராஷ்பிகாரி கோஷ், முகல்கர், எஸ்.பி.சின்ஹா, மதன்மோகன் மாளவியா, லசயத் முகமது, மஜும்தார், பி.என்.தர், பாசு, டாக்டர் அன்னி பெசன்ட் அம்மையார், ஹசன் இமாம், லாலா லஜபதி ராய், எம்.முகமது அலி, மோதிலால் நேரு, அஜ்மல்கான், அபுல்கலாம் ஆஜாத், விஜயராகவாச்சாரி, தேசபந்து சி. ஆர். ,தாஸ், காந்திஜி, சரோஜினி நாயுடு, நேருஜி, நெல்லி சென் குப்தா, சீனவாச அய்யங்கார், சர்தார் வல்லபாய் படேல், ராஜேந்திர பிரசாத், எம்.ஏ அன்சாரி, சேத் ரங்கலால், சுபாஷ் சந்திரபோஸ், கிருபளானி, புருஷோத்தம தாஸ் தாண்டன், இந்திராகாந்தி, பட்டாபி சீதாராமையா, யூ.என்.தேபர், சஞ்சீவ ரெட்டி, சஞ்சீவய்யா ஆகியோர் காங்கிரஸ் மகாசபையின் தலைவர்களாகப் பணியாற்றினர். இதன்பிறகு காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு காமராஜ் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தலைவரானார். அடக்குமுறை துப்பாக்கிக் குண்டு ஆகியவற்றை தாங்கி இந்தியாவிற்கு விடுதலை வாங்கித் தந்தது அந்தக் காங்கிரஸ். உலகெங்கும் பிரபலமான அந்த அகில இந்திய காங்கிரஸுக்குத் தலைவராக காமராஜ் ஒரு பாமரர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதில் தமிழர்களாகிய நமக்குத் தான் எத்தனை பெருமை!

## தமிழர்களுக்குப் பெருமை!

அகில இந்திய காங்கிரஸ் தலைவராகக் காமராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டபின் அவர் தலைமையில் நடந்த இந்திய தேசிய க்காங்கிரஸின் 68 ஆ து மகாசபைக் கூட்டம் ஒரு வரலாறு படைத்தது. காமராஜ் இந்தக் கூட்டத்திற்கு தனி ரெயிலில் சென்றார். அவருடன் என்றும் இல்லாத அளவிற்குத் தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளும் உடன் சென்றனர். நானும் சென்றேன். அந்தக் காட்சி என் கண்முன் வருகிறது.

1964 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி இரவு 2 மணிக்கு சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்தை விட்டு புவனேஸ்வரம் ஸ்பெஷல் புறப்பட்டு 5ஆம் திகதி மாலை 3மணிக்கு ஒரிசாவின் தலைநகரான புவனேஸ்வரத்தை அடைந்தது. இடையில் உள்ள சுமார் 900 மைல் தூரத்தை எப்படிக் கடந்தோம் என்பதே தெரியாமல் வழி நெடுகிலும் இருந்த மக்கள் தங்கள் தமிழ்ச் சகோதரர்களின் மேல் அன்புமழை பொழிந்தனர். குறிப்பாகத் தமிழகத்தின் அண்டை மாநிலமான ஆந்திர மக்களின் அன்பு வெள்ளத்தில் சிக்கி காமராஜும் அவருடன் சென்ற 700 தமிழகக் காங்கிரஸ் தோழர்களும் தத்தளித்துப் போய்விட்டோம்.

4ஆம் திகதி காலை 7மணிக்கு ஆந்திர மாநிலத்தில் உள்ள நெல்லூரைத் தனி ரெயில் அடைந்தது. அப்போது ரெயில் நிலையமே அதிர்ந்தது. வந்தே மாதரம்! காமராஜ் நாடார் காருகி – ஜே!

காங்கிரஸ் அத்தியட்சகர் காமராஜ் காருகி ஜே!

(தொடரும்)



## கந்தரோடை வீரகத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம்

பத்தாம் திருவிழா 08.08.2006

### கற்கோயில் கொண்டான்

கற்பகக் களிறு கற்றவரு ணும் தேன்கனி
விற்பொலி வீரகத்தி விநாயக மூர்த்தி
நற்றவர் நாளும் நவைகெட வழிபட
கற்கோயில் கொண்டனை கந்தரோடை கானே!

*சிவ.சண்முகவடிவேல்*

## சுற்றிவளைப்பால் சுகாதாரச் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன் தினம் சாவகச்சேரி கச்சாய் வீதியின் தெற்குப் பிரதேசமான கடற்கரைப் பிரதேசம் சுற்றிவளைப்புக்கு உட்படுத்தப்பட்டதால் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களது சுத்திகரிப்பு வேலைகள் ஸ்தம்பிதமடைந்தன. பொதுச் சந்தை, நகரம், பஸ் நிலையம் யாவும் குப்பை கூழங்களால் நிரம்பியுள்ளன.

கழிவு வாய்க்கால், மீன்சந்தை, பொது மலசலகூடம் என்பன துப்பரவாக்கப்படாமையால் துர்நாற்றம் வீசுகிறது. இச்சுற்றிவளைப்பால் அத்தியாவசிய சேவைகளைச் சேர்ந்த ஊழியர்கள் கடமைக்குச் செல்லமுடியாது தவிர்த்ததைக் காணக்கூடியதாக இருந்தது. சுத்திகரிப்புத் தொழிலாளர்களது குடியிருப்புகள் அந்தப் பகுதியிலேயே உள்ளது குறிப்பிடத்தக்கது.

(து-29)

## அடிப்படை வசதிகளற்ற நிலையில் இடம்பெயர்ந்த மூதூர் அகதிகள்


(திருகோணமலை)


மூதூரிலிருந்து இடம்பெயர்ந்து வெளியேறும் அகதிகளின் தொகை அதிகரித்து வருகின்றது. இடம்பெயர்ந்த இம்மக்கள் அடிப்படை வசதிகள் இல்லாமல் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இது வரை இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் கந்தளாய் அல்தாரிக் மகா வித்தியாலயம், ஆயிஷா வித்தியாலயம், பேராற்று வெளி வித்தியாலயம், அக்கரபோதி மகாவித்தியாலயம், வான் எலபுவிராரி வித்தியாலயம், கிண்ணியா அல் அக்ஸா மகாவித்தியால்யம், முனைச்சேனை அல் முஜா ஹிதா வித்தியாலயம் உட்பட பள்ளிவாசல்கள், விகாரைகள் அரச கட்டடங்கள் மற்றும் உறவினர் வீடுகளில் இவர்கள் தங்கியுள்ளனர்.

இடம்பெயர்ந்த இம்மக்கள் உணவு, குடிநீர் மருத்துவ வசதிகள் உட்பட்ட பல அடிப்படை வசதிகள் இன்றி கஷ்டப்படுகின்றனர். தொண்டு நிறுவனங்களாலும் பொதுமக்களாலும் வழங்கப்படுகின்ற சமைத்த உணவு அரிசி, சீனி, பால்மா, பிஸ்கட், பாண் முதலியன வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் இவ்வாறு வழங்கப்படுகின்ற உணவுகள் அகதிகளுக்குச் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இம்மக்களின் நலனை கண்டறிந்து உதவும் வகையில் அமைச்சர் ரிசாட் பதியுதீன் ஏ.எச்.எம் பௌசி நஜீப் ஏ.மஜித் உட்பட அமைச்சர் குழுவினர் நிலைமையை கண்காணித்து வருகின்றனர்.

(து)





பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட உலகளாவிய ஊனமுற்றோர் தின நிகழ்வில் உடுவில் வாழ்வகத்தைச் சேர்ந்த பார்வையற்ற பிள்ளைகளையும், கைதடி நவீட் பாடசாலை செவிப்புலன் அற்ற வாய் பேசமுடியாத பிள்ளைகளையும், மேலும் கை, கால் வழங்க முடியாத சிலருக்கு யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் சிற்றுண்டிகளும் அன்பளிப்புகளும் ஆன்மீக அறிவுரைகளும் வழங்கப்படும் காட்சிகளைப் படங்களில் காணலாம்.

# மண்டபம் முகாமில் தங்கியுள்ள அகதிகள் கைதிகள் போல் நடத்தப்படுகின்றார்கள்

## ம.தி.மு.க.சட்டமன்ற உறுப்பினர்கள் அறிவிப்பு

மண்டபம் அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் அங்கு கைதிகள் போல் நடாத்தப்படுகின்றனர். அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சலுகைகள் கூட அவர்களுக்கு கிட்டவில்லை என அங்கு ஆய்வு நடத்திய ம.தி.மு.க உறுப்பினர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். சுமார் 200ஏக்கர் பரப்பளவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள மண்டபம் அகதிகள் வரவேற்பு முகாமில் 2000 குடியிருப்புகள் உள்ளன. அவற்றை நேரில் பார்ப்பதற்காக ம.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் கடந்த சனிக்கிழமை மண்டபம் அகதிகள் முகாமிற்கு சென்றனர். அப்போது, கடந்த வெள்ளிக்கிழமை இலங்கையிலிருந்து இராமேஸ்வரம் வந்த 90அகதிகள் விசாரணைக்காக மண்டப முகாமில் உள்ள அகதிகள் மறுவாழ்வுத் துறை அலுவலகத்தில் காத்திருந்தனர். அவர்களை கண்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இலங்கையின் தற்போதைய நிலை குறித்துக் கேட்டறிந்தனர்.

பின்னர் மண்டபம் முகாமிற்குள் சென்று அகதிகள் குடியிருப்பு உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட்ட அவர்கள் அகதிகளின் தேவைகளையும் கேட்டறிந்தனர். முகாமிற்குள் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அகதிகளையும் அவர்கள் சந்தித்துப் பேசினர். முன்னதாக முகாமிற்கு செல்ல இச்சட்ட உறுப்பினர்களுக்கு உடனடியாக அனுமதிகொடுக்காமல் சுமார் 1மணி நேரம் அகதிகள் மறுவாழ்வு துறை அதிகாரிகள் காக்க வைத்தனர். இவர்களுடன் பத்திரிகையாளர்களும் முகாமிற்கு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் முகாம் தனித்துணை மாவட்ட ஆட்சியர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அகதிகளைப் பார்த்த பின்பு சட்டமன்ற உறுப்பினர்கள் நிருபர்களிடம் தெரிவிக்கையில், ''இலங்கையில் இருந்து வந்துள்ள ஈழத் தமிழர்களின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. முகாமில் உள்ள அகதிகள் அனைவரும் கைதிகள் போலவும் அடிமைகள் போலவும் நடாத்தப்பட்டு வருகிறார்கள். பெண்கள் இயற்கைக் கடமைகளை கழிப்பதற்கு கூட முகாமில் மறைவான இடங்கள் இல்லை.

முகாமில் தற்போது 3ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் உள்ளனர். அவர்களுக்கு மாலை 5மணி முதல் மறுநாள் 6மணிவரை ஒரே ஒரு மின் விளக்கு மூலம் மட்டும் மின்சாரம் வழங்கப்படுகிறது. இவ்வளவு அகதிகள் தங்கியுள்ள முகாமில் மருத்துவமனையில் 20 படுக்கை வசதிகள் மட்டுமே உள்ளன. அகதிகளுக்கு அரசு அறிவித்த சலுகைகளும் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதுவரை மண்டபம் முகாமை பார்வையிட பல்வேறு கட்சியினர் வந்துள்ளனர். அவர்களுடன் பத்திரிகையாளர்களும் செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஆனால் ம.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் வரும்போது மட்டும் பத்திரிகையாளர்களை அனுமதிக்காதது கண்டனத்திற்குரியது.

பத்திரிகையாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டதைக் கண்டித்து சட்ட சபையில் குரல் கொடுப்போம். இதுகுறித்து அறிக்கையை வைகோவிடம் ஒப்படைப்போம். அவர் மூலம் மத்திய அரசுக்கு தெரிவித்து அகதிகளுக்கு வசதி செய்துதர நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றனர். (து-7)

# பேருந்து விபத்தில் நடத்துனர் பலி

மட்டக்களப்பு தனியார் பேருந்து நிலையத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கதிர்காம யாத்திரிகைக்கு புறப்பட தயாராக இருந்த பேருந்து ஒன்றின் நடத்துனரே இந்த அனர்த்தத்தில் பலியாகியுள்ளார். தவறுதலாக கீழே விழுந்த பேருந்து நடத்துனரின் தலை பேருந்து சக்கரத்தில் சிக்கியதால் படுகாயமடைந்த அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். (து-9)

# வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் 15 பேர் சடலங்களாக மீட்பு?

(கொழும்பு)

மூதூரில் இயங்கிவரும் வெளிநாட்டு தொண்டர் நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த 15 உள்ளூர் பணியாளர்கள் சடலங்களாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். சடலமாக கண்டுபிடிக்கப்பட்ட இவர்கள் தமது நிறுவனத்தின் அலுவலகத்தில் கோரமாகக் கொலை செய்யப்பட்டதாக வெளிநாட்டு தொண்டர் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலைகள் யாரால் புரியப்பட்டது என்பதைத் தங்களால் கண்டறிய முடியவில்லை என்று அவர்மேலும் குறிப்பிட்டுள்ளார்.

''எமது நிறுவனத்தின் 25 வருட காலசேவையில் இவ்வளவு தொகையான உயிரிழப்புகள் இதற்கு முன்னர் ஏற்படவில்லை. குறிப்பிட்ட இடத்திற்கு எமது நிறுவனத்தைச் சேர்ந்த குழுவினரை அனுப்பிவைக்கஎடுத்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ளது'' எனத் தெரிவித்துள்ள பணிப்பாளர் நாயகம் இந்தப் படுகொலையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் ஏனையவர்களுக்கும் தனது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தப் படுகொலைகள் உறுதிசெய்யப்படாத நிலையிலேயே வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். (து-9)

# உறுதிமொழிகளைக் காப்பாற்றாத அரசியற் கட்சிகள்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் நாட்டின் சாதாரண மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இதுவரை நிறைவேற்ற முடியாது போயுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

புதிய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தினால் நாட்டில் எந்த இனப் பிரிவினருக்கும் அடிப்படைத் தேவைகள் உரிய முறையில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் இந்த நாட்டில் சாதாரண மக்களை ஏமாற்ற இடமளிக்கமுடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

# துப்பாக்கிச் சூட்டுக்கு பொலிஸார் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு பார் வீதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பொலிஸார் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இறந்தவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.


இதேவேளை வவுனியா வாரிக்குட்டியூர் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் மேலும் ஒரு பொலிஸார் காயமடைந்துள்ளார்.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் நான்கு பொலிஸார் தனிப்பட்ட வைபவம் ஒன்றில் கலந்துகொள்வதற்காக சென்ற போதே இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் குறித்தும், பொலிஸ்ாரினால் தனிப்பட்ட வைபவத்திற்கு சென்றமை தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள் ளனர். -(து-9)







நேர்முகப்பரீட்சை நடத்தி நியமனம் வழங்கக்கோரியும், திடீரென யாழ். கல்வி வலயத்தால் 9 தொண்டர் ஆசிரியர்களுக்கு மாத்திரம் நேர்முகப் பரீட்சை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டதைக் கண்டித்தும் யாழ். கல்வி வலயத்தின் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள யாழ். தொண்டர் ஆசிரியர் களையும் இதனால் ஸ்தம்பிதமடைந்துள்ள வலயப் பணிமனையையும் படங்களில் காணலாம்.








யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று பகல் 11.30 மணிக்கு யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊனமுற்றவர்களும் இணைந்து நடாத்திய சர்வமத பிரார்த்தனையும் சமாதானப் பேரணி நிகழ்வில் கலந்துகொண்ட சர்வ மத குருமார்களையும், யாழ். மாவட்ட செயலகம் நோக்கி அமைதி ஊர்வலமாகச் செல்வதையும், யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்-திலீவின்பன்)

முன் எப்பொழுதையும் விட உலகம் இப்போது நெருங்கிய பிணைப்புக்கொண்டிருக்கிறது. சட்ட நியாயத்தின்படி தகராறுகள் தீர்வதை. நாம் உறுதி செய்யவேண்டும். -டாக்டர் இராதாகிருஷ்ணன்.

வலம்புரி

# இந்தியாவின் பங்களிப்பு இலங்கையில் தேவையானது

இலங்கையில் மீண்டுமொரு பாரிய யுத்தம் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நோர்வேயின் சமாதான முயற்சிகள் தோல்வி கண்டு விட்டன. யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் பணியும் எதிர்காலத்தில் சக்தியற்றதாகவே இருக்கப்போகின்றது.

இவை அனைத்தும் இலங்கைத்தீவில் மீண்டும் பாரிய ஒரு யுத்தத்தை ஏற்படுத்தப்போவதை பறைசாற்றி நிற்கின்றன.

பேரழிவை தரக்கூடிய யுத்தத்தை இலங்கையில் தவிர்ப்பதாயின் அதற்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு வழி இலங்கைப்பிரச்சினையில் இந்தியா தலையிடுவதாகும்.

இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டாலும் இலங்கையில் வெடிக்கவிருக்கும் யுத்தத்தையும் தடுக்க முடியாது என்பது உறுதி.

நோர்வேயைப் பொறுத்தவரை அந்நாடு சமாதான அனுசரணைப்பணியை மட்டுமே வழங்கும். அதில் இலக்கை அடைய முடியாவிட்டால் அப்பணியில் இருந்து நோர்வே விலகிக்கொள்ளும்.

ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கைக்கு மிக நெருக்கமான அண்டைநாடாக அது இருக்கிறது.

அத்துடன் இந்தியாவின் எல்லைகளை -அதன் ஆதிக்கத்தை மீறி எந்தநாடும் இலங்கைப்பிரச்சினையில் தலையிட முடியாது.

எனவே இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதாயின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதாயின் அதற்கு இந்தியாவின் பங்களிப்பும் தலையீடும் மிகவும் இன்றியமையாததாகும்.

எனினும் கடந்த கால நிகழ்வுகள் இலங்கை மீதான இந்தியாவின் நேரடித்தலையீட்டை தடை செய்வதாக அமைந்துள்ளது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்தபோது இந்தியாவின் தலையீட்டை அவர் தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டார்.

இதனால் இந்திய அமைதிப்படை ஈழத்தமிழர்களுக்கு எதிராக செயற்படலாயிற்று.

இலங்கை இராணுவத்தால் பாதிப்படைந்த ஈழத்தமிழர்கள் மீது இந்திய அமைதிப்படையும் தாக்குதல் நடத்தியமை வேதனைக்குரிய சம்பவமாகும்.

இத்தகைய நிகழ்வுகள் அரசியல் புலத்தில் துரதிஷ்ட வசமானதாகும். இவ்வாறான துரதிஷ்ட சம்பவங்கள் நடந்து விட்டதென்பதற்காக இந்தியா தனது தார்மீகக்கடமைகளில் இருந்து விலகி விட முடியாது.

இலங்கையில் யுத்தம் என்றதும் ஈழத்தமிழர்கள் தம்மைப்பாதுகாப்பதற்காக தமிழகத்திற்குச் செல்கிறார்கள். இதிலிருந்து இந்தியா ஈழத்தமிழர் விடயத்தில் தனக்கு இருக்கக்கூடிய பொறுப்பை உணர்ந்துகொள்ளும்.

எனவே பழையன கழிந்துபோக,மறந்து போக மீண்டுமோர் யுத்தம் இலங்கையில் ஏற்படுவதைத் தடுக்க- அதனால் நிகழக்கூடிய மனித அழிவுகளைத்தவிர்க்க இந்தியா இலங்கைப்பிரச்சினையில் தலையிட்டாக வேண்டும்.

# சொல்வார் சொன்னால் கேட்பவருக்கு மதி எங்கே?

## மாவிலாறு தாக்குதல் பற்றி ரணில் சாடல்


(கொழும்பு)

மாவிலாறு அணைக்கட்டை மீட்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி பயனளிக்கவில்லை என்று எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தகுந்த ஆலோசனைகளைப்பெறாமல் அரசாங்கம் செயற்பட்டதனால் பாரிய உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கற்பிட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

இரத்தினதேரர் விமல் வீரவன்ச ஆகியோர் கூறியமைக்காக வேறு எவரிடமும் ஆலோசனைகளைப்பெறாமல் குறிப்பாக இராணுவத்தின் உயர்-அதிகாரிகள் ஆலோசனையைக் கூட பெறாமல் செயற்பட்டதன் காரணமாக நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் சுட்டிக் காட்டினார்.

24 மணி நேர அணைக்கட்டை திறப்பதாக அரசாங்கம் கூறியபோதிலும் இன்னும் நீர் வழங்க முடியவில்லை. அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படையில் செயற்படவேண்டும். தாக்குதல் நடத்தப்பட்டால் பதில்தாக்குதல் நடத்தப்படும் என்று அரசாங்கம் கூறுவது சரி யான ஒரு தீர்வா? என்று அவர் கேள்வி எழுப்பி யுள்ளார்.



அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளும் இணங்கி யுள்ள அனை த்து விடயங்களையும் இரு தரப்பினரும் நடை முறைப்படுத்தவேண்டும் என்று டோக்கியோ நக ரில் ஒன்று கூடிய சர்வ தேச சமூகம் வலியுறுத் தி யுள்ளதாகவும் அந்த விடயம் போர் நிறுத்த உடன் படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவும் அதே விடயத்தை கூறியுள்ளது என்று தெரிவித்த அவர் அதிலிருந்து இலங்கை விலகினால் சர்வதேச சமூகம் இலங்கையை மறந்துவிடும் என்று குறிப்பிட்டுள்ளார். (து-9)

# கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவும் பணியில் ஐ.சி.ஆர்.சி

கடந்த 6 நாட்களாக இலங்கை பாதுகாப்பு படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் மோதல்களை அடுத்து சர்வதேச செஞ்சிலுவைக் குழுவானது.செஞ்சிலுவை இயக்கம் , உள்ளூர்அதிகார அமைப்புக்கள் மற்றும் ஏனைய மனிதாபிமான அமைப்புக்களுடன் இணைந்து நிவாரண உதவி நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளது.

ஐ.சி. ஆர்.சி வாகன அணியினர் 6 லொறிகள் 2 அம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் 3 வாகனங்களில் நேற்று முன்தினம் மூதூர் பகுதிக்குச் சென்று 400 இடம்பெயர்ந்த மக்களை திருகோணமலை நகருக்கு அழைத்துவந்தனர். மேலும் இரு காயப்பட்டவர்கள் ஈச்சிலம்பற்றை வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட போக்குவரத்து வசதி அளிக்கப்பட்டது. கந்தளாயில் தற்சமயம் தங்கியிருக்கும் 15ஆயிரம் இடம்பெயர்ந்தவர்களின் மனிதாபிமானத்தேவைகளை மதிப்பிடுவதில் ஐ.சி.ஆர்.சி. ஈடுபட்டுள்ளது. தண்ணீர் மற்றும் சுகாதாரப் பிரச் சினைகள் தொடர்பில் கவனம் எடுக்கப்படுகின்றது.

இதேவேளை, இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் இம் மக்களுக்கு உணவளித்துவருகின்றது. திருகோணமலை நகரில் நேற்று முன்தினம் ஐ.சி.ஆர்.சி. அத்தியாவசிய வீட்டுப் பாவனைப்பொருட்கள் அடங்கிய 163 பொதிகளை 300குடும்பங்களுக்கு உதவியிருந்தது. இப்பொதியில் கூரைவிரிப்பு, பாய், பானை, வாளி, நுளம்புவலை, மண்ணெண்ணை அடுப்பு மற்றும் விளக்கும் அடங்கியிருந்தது.

ஐ.சி.ஆர்.சி.ஆனாது மோதலில் ஈடுபடும் இரு தரப்பாரும் சர்வதேச மனிதாபிமான சட்டவிதிகள் கடைப்பிடிக்கப்படலில் அவர்களுக்கான கடப்பாடுகளை ஞாபகப்படுத்தி வருகின்றது.பொதுமக்களை பாதுகாக்கும்படி மனிதாபிமான உதவிகள் விநியோகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதை உறுதிப்படுத்தும் படியும் இரு தரப்பாருக்கும் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

கந்தளாயில் உள்ளூர் அதிகாரிகளுடன் தற்சமயம் சந்திப்புக்களை நடாத்தி வரும் ஐ.சி.ஆர். சியின் இலங்கைக்கான தலைவர் ரூன் வன்ரன் கொவ் நாம் தற்சமயம் கடுமையான மனிதாபிமான அவசரகால நிலைமையினை எதிர்கொண்டுள்ளோம் எனவே சகல தரப்பினரதும் உதவியும் ஒத்துழைப்பும் எமக்குத் தேவை யாய் உள்ளது என்று குறிப்பிட்டார். (து)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்தடுப்பூசி ஏற்றலும் இடமும் நேரங்களும்

விசர் நோய் தடுப்பூசி பின்வரும் ஒழுங்கில் ஏற்றப்படவுள்ளதாகவும் பொதுமக்கள் தமது வளர்ப்பு நாய்களை தவறாது கொண்டு வந்து ஊசி ஏற்றும்படியும் இந்நாட்களில் நாய்களைக் கட்டி வளர்க்கும் படி நகரசபை சுகாதார பரிசோதகர் எஸ்.மணிவர்ணம் கேட்டுள்ளார்.

இதன்படி எதிர்வரும் 10ஆம் திகதி நுணாவில் மேற்கு அம்பாள் சனசமூக நிலையம், நுணாவில் மேற்கு வீரபத்திர கோவிலடி, நுணாவில் மேற்கு நகர சபை வாசிகசாலை ஆகிய பகுதிகளில் மு.ப.8.00மணிதொடக்கம்.மு.ப.11.00மணி வரையிலும் நுணாவில் மேற்கு ஆணைக்கோட்டை, நுணா வில் மேற்கு வேரற்கேணியடி , மட்டுவில் தெற்கு உப தபால் கந்தோர் அருகில் ஆகிய பகுதிகளில் மு.ப.11.30 மணி தொடக்கம் 2.30மணிவரையிலும் ஏற்றப்படும்.

11 ஆம் திகதி நுணாவில் மத்தி ''கோபி'' தொலைத் தொடர்பு நிலையம், நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை அருகில் , நுணாவில் மத்தி வேலாயுதம் வீதி ஆகிய பகுதிகளில் மு.ப.8.00மணிதொடக்கம் 11.00மணிவரையும், கற்குழி சத்தியசாயி சேவா நிலையம் , நுணாவில் மத்தி துர்க்கா பலசரக்குக் கடையடி, சாவா மகளிர் கல்லூரியடி ஆகிய பகுதிகளில் மு.ப.11.30 மணிதொடக்கம் 2.30 மணி வரையும் ஏற்றப் படும்.

12 ஆம் திகதி கல்வயல் குடும்பநல உத்தியோகத்தர் காரியாலயம் , கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம், சாவகச்சேரி நகரசபை ஆகிய பகுதிகளில் மு.ப.8.00 தொடக்கம் மு.ப.10.30 மணி வரையும் நுணாவில் மேற்கு மருந்தடி பிள்ளையார் கோவிலடி, கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோவிலடி, மோகன தாஸ் வாசிக சாலையடி ஆகிய பகுதிகளில் முற்பகல் 11மணி தொடக் கம் பி.ப.12.மணி வரையும் ஏற்றப்படும்.

14ஆம் திகதி ஹெரடாவில் ஐங்கரன் பாலர் பாடசாலை, இராம்புவில் பாலமுருகன் பாலர்பாடசாலை, ஹெருடாவில் திருக்குமரன் சனசமூகநிலையம் ஆகிய பகுதிகளில் முற்பகல. 8.00மணிதொடக்கம் மு.ப.11மணிவரையும் மண்டுவில் கிராம அலுவலர் காரியாலயம் (ஜே/304 , வயல்கரை மலைமகள் சனசமூகநிலையம் , சோலையம்மன் கோவில் அடி ஆகிய பகுதிகளில் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பி.ப.2.30 மணிவரையும் ஏற்றப்படும்.

15ஆம் திகதி மீசாலை விக்னேஸ்வரா பாடசாலையடி, மீசாலை மேற்கு கேணியடிவீதி, ஸ்ரீவிநாயகர் வெதுப்பகம் அருகில் , மீசாலை மேற்கு ந.நகேஸ்வரன் வீடு (படப்பிடிப் பாளர்) ஆகிய பகுதிகளில் மு.ப.8மணிதொடக்கம் பி.ப.2.30 மணிவரையும் ஆகிய பகுதிகளில் தடுப்பு மருந்து ஏற்றப் படும். (து-9)

# பேசாலை மக்களை வெளியேற பொலிஸார் உத்தரவு

(கொழும்பு)

மன்னார் பேசாலையில் வீடுகளிலிருந்து பொது மக்களை வெளியேறுமாறு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

இதையடுத்து பேசாலை முதலாம் வட்டாரத்திலிருந்து அனைத்து தமிழ் குடும்பங்களும் அகதிகளாக வெளியேறி உள்ளனர்

இதனால் மொத்தம் 70 குடும்பங்கள் இடம்பெயர்ந்து தேவாலயம் மற்றும் உறவினர் வீடுகளில் அகதிகளாகத் தங்கி உள்ளனர் பேசாலை முதலாம் வட்டாரப் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்தின் மீது கைக்குண்டுத்தாக்குதுல் நடத்தப் பட்டதையடுத்து இந்த உத்தரவை பொலிஸார் பிறப்பித்துள்ளனர்.

கைக்குண்டுத் தாக்குதலில் ஜெயந்தலால் (வயது 35) சிறிதிஸநாயக்க (வயது 36)ஆகியோர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிகிறது. (து-7)

# கண்டியில் கிளைமோர் தாக்குதலில் அதிரடிப்படை உயரதிகாரி பலி

(கொழும்பு)

இலங்கை சிறப்பு அதிரடிப்படையின் மூத்த காவல்துறை அத்தியட்சகர் உபுல் செனிவிரத் ன நேற்று அதிகாலை 4.00மணியளவில் கண்டியில் நடைபெற்ற கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்துள்ளதாக தெரிகிறது.

தனது பணிக்காக அவர் சென்று கொண்டிருந்தவேளை அவரது ஊர்தி கிளைமோர் தாக்குதலில் சிக்கியதையடுத்து படுகாயமடைந்த அவர் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் காலை 6.10 மணியளவில் உயிரிழந்தார். (து)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



எந்தச் செயல் புரிந்தாலும் நான் செய்கிறேன் என்ற எண்ணத்தை விட்டு 'இறைவனே உன் பணி செய்கிறேன். நீயே கர்த்தா. நான் உன் கருவியாக இருந்து செய்கிறேன்' என்ற எண்ணத்தில் வாழ வேண்டும்.

## நல்லூர் ஆலயச் சூழலில்

# யாழ்.தமிழ் மாணவர் ஒன்றியம் சிறப்பு தொண்டர் பிரிவு கடமையில்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் சிறப்புத் தொண்டர் பிரிவு ஒன்று நேற்று முதல் கடமையில் ஈடுபட்டுள்ளது.

மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் சக்திகளைக் களையும் விதமாக தமிழ் மாணவர் ஒன்றியத்தால் உருவாக்கப்பட்ட சிறப்புத் தொண்டர் பிரிவே கடமையில் ஈடுபடுவதாக தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் ஒன்று கூடுகின்ற நல்லைக் கந்தன் மஹோற்சவகாலங்களில் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்தும் விசமிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்ற வருடம் எம்மால் திருட்டுச் சம்பவங்களில் இனங்காணப்பட்டபெண்கள் பலர் தென்னிலங்கையிலிருந்து வருகை தந்து நல்லூர்ச் சூழலில் நடமாடுகின்றனர்.

எனவே மக்கள் மிகவும் விழிப்பாக இருப்பதோடு கடமையில் உள்ள தொண்டர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் தமிழ் மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ச-5)

# தமக்கு நியமனம் வழங்கக் கோரி தொண்டர் ஆசிரியர்கள் மறியல் போர்

தேசிய பாடசாலைகளில் கற்பிக்கும் 9 தொண்டர் ஆசியர்களுக்கு நேற்றுக் காலை யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் இடம் பெறவிருந்த நேர்முகப் பரீட்சைக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் முகமாக நேற்றுக் காலை 7.30 மணிக்கு யாழ்.மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் யாழ்.கல்விப் பணிமனைக்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்களது மறியல் போராட்டத்தையடுத்து யாழ்.கல்விப் பணிமனையில் நடைபெற ஏற்பாடாயிருந்த நேர்முகப் பரீட்சை அவசர அவசரமாக கனகரத்தினம் மகாவித்தியாலயத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதை அறிந்த தொண்டர் ஆசிரியர்கள் கனகரத்தினம் மகாவித்தியாலயத்திற்கு முன்பாகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் நற்குணராஜா இவ்விடயம் தொடர்பாக தொண்டர் ஆசிரியர்களை பகல் 12 மணிக்குச் சந்தித்துப் பேசினார்.

பேச்சுவார்த்தையில் திருப்தியடையாத தொண்டர் ஆசிரியர்கள் இது தொடர்பான அறிக்கையை மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கும் மாகாண கல்வி அமைச்சுக்கும் ஜனாதிபதிக்கும் அனுப்பி வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை இப். போராட்டம் இன்றும் தொடருமென தொண்டர் ஆசிரியர். சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (கு-133)

# இரண்டு இளைஞர்கள் இராணுவத்தால் கைது

(யாழ்ப்பாணம்)

இராணுவம் கைது செய்ததாகத் தெரிவித்து இரு இளைஞர்களின் உறவினர்கள் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த ? ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி முத்துமாரி அம்மன் கோவிலுக்கு பூசைக்காகச் சென்ற பூசகர் வைத்தியநாதசர்மா கௌரிசங்கர் (வயது-28) என்பவரை இராணுவம் கைது செய்துள்ளதாக நேற்று அவரது உறவினர்கள் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை மிருசுவில் கெற்பலி மேற்கைச் சேர்ந்த தாஸ் அக்கடமி கல்வி நிறுவன இயக்குநர் சிதம்பரநடராஜா சுரேஷ் (வயது-25) என்பவரை இராணுவம் கைது செய்துள்ளதாக அவரது உறவினர்கள்மனித உரிமைஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மூன்று மணிக்குக் கச்சாய் அம்மன் கோவிலுக்கு முன்பாக வைத்து இராணுவ பவள் வாகனத்தில் அவர் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் அவரது மோட்டார் சைக்கிளை இராணுவம் கொண்டு சென்றதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-133)

# பௌயரின் இலங்கைப் பயணத்தை அர்த்தமற்றதாக்கியுள்ளது அரசு

## எரிக்சொல் ஹெய்ம் குற்றச்சாட்டு

யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியும் என அரசாங்கம் நம்பும் பட்சத்தில் ராஜதந்திர ரீதியில் தீர்வைக் காணுமாறு கூறுவது நேரத்தை வீணடிக்கும் செயல் என நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மாவிலாற்றை திறப்பதற்கு தங்கள் நல்லெண்ணத்தைத் தெரிவித்திருந்த போது மாவிலாற்றைக் கைப்பற்றுவதற்கான வலிந்த தாக்குதலை அரசு ஆரம்பித்ததன் மூலம் சிறப்பு சமாதானதூதுவர் ஹான்சன் பௌயரின் பயணத்தை அரசாங்கம் அர்த்தமற்றதாக்கியுள்ளது என அவர் குற்றம் சாட்டியுள்ளார். யுத்தத்தின் மூலம் மாவிலாற்று அணைக்கட்டு விவகாரத்திற்குத் தீர்வு காணும் போது ராஜதந்திர ரீதியில் தீர்வு காணுமாறு நோர்வேயிடம் அரசாங்கம் கோரிக்கை விடுத்தமை அபத்தமான செயல் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அரசாங்கத்திடம் சரியான விளக்கத்தை நோர்வேயின் சிறப்பு சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## மாவிலாறு நோக்கி...

இதில் ஈச்சிலம்பற்று பிரதேச மக்களின் சம்பூருக்கான போக்குவரத்துப் பாதையின் பாலமாக அமையும் இலங்கைத் துறைமுகத் துவாரப் பாலம் தாக்குதலுக்கு இலக்காகி முற்றாக சேதமடைந்துள்ளது.

அந்தப் பாலத்தை அண்மித்த மக்கள் குடியிருப்புக்கள் மீதும் குண்டுகள் வீழ்ந்து வெடித்ததால் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மக்கள் குடியிருப்புக்களை நோக்கி இராணுவத்தினர் பல்குழல் தாக்குதல்களை நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## இளைஞன் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டியில் நேற்று இரவு 7.50 மணியளவில் இளைஞன் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஆட்டோ திருத்துநரான சிறுப்பிட்டித் தெற்கைச் சேர்ந்த தருமு தீசன் (வயது-24) என்பவரே கொல்லப்பட்டவராவார். (எ-05)

## சிரேஷ்ட...

அத்துடன் பொலிஸ் பயிற்சிக்கல்லூரியின் அதிகாரியாகவும் கடமையாற்றி வந்ததாக தெரிவிக்கப்பட்டது. 2003 ஆம் மற்றும் 2004 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் கண்காணிப்புக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட நிலைமைகள் தொடர்பான விடுதலைப்புலிகள்-அரச படைகள் சந்திப்புக்களில் அரச படைகளின் பிரதிநிதியாகவும் கலந்து கொண்டிருந்தார். (ச-5)

## புலிகள் மீதான தடை இருக்கும் வரை...

ஞானசேகரன் பேசும்போது வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் நகரில் புரட்சிகர இளைஞர் முன்னணி என்கிற அமைப்பு விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்தியதாகவும் அதில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததோடு தடை நீக்கப்படவில்லை என்றால் இந்தியா துண்டு துண்டாகவிடும் என்று எச்சரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிராக செயல்பட்ட அவர்கள் மீதும் அந்த கூட்டத்தில் பங்கேற்ற மற்ற கட்சியினர் மீதும் வழக்கு ஏதாவது பதிவு செய்யப்பட்டுள்ளதா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த கருணாநிதி புரட்சிகர இளைஞர் முன்னணியை சேர்ந்தவர்கள் ஜூலை 31-ம் திகதி ஈழத்தமிழர்களுக்கு எதிராக செயல்படும் இலங்கை அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தியதாகவும் இந்த ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து எந்த பதற்ற நிலையும் வேலூர் மாவட்டத்தில் இல்லை என்றும் நிலைமை கண்காணிக்கப்பட்டு வருவதாக மாவட்ட அதிகாரிகள் தமக்கு தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

ஈழத்தமிழர்களுக்கான தமது அனுதாபத்தை ஈழத்திலே இருப்பவர்களுக்கும் சிங்கள தரப்புக்கும் இந்திய அரசுக்கும் வெளிப்படுத்துகின்ற வகையில் ஆர்ப்பாட்டங்களோ கிளர்ச்சிகளோ அமையுமானால் அது ஏற்கத்தக்கதே என்று கூறிய கருணாநிதி அதே சமயம் இத்தகைய பேரணி மற்றும் ஊர்வலங்களின் நிலைமைகள் வேறுமாதிரி திரும்புமேயானால் அரசு அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காது என்றும் எச்சரித்துள்ளார். (ச-5)

## விடுதலை...

அணையை நெருங் குகின்றனர். இன்னும் சில மணிநேரங்களில் அணை திறக்கப்பட்டு நீர் திறந்து விடப்படும் என அமைச்சர் நேற்று தெரிவித்தார்.

மாவிலாறு பிரதேசத்திலிருந்து அனைத்துப்புலிகளும் வெளியேற்றப்படும் போதுதான் எமது நடவடிக்கை நிறுத்தப்படும் என்றார் ஹெகலிய ரம்புக்வெல. (ச-5)

## நோர்வேயின் அமைதி முயற்சிகளை...

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நோர்வே சிறப்புத் சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் மற்றும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோருடனான நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போது எதுவித நிபந்தனையும் இன்றி மாவிலாறு அணையை திறக்க தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் இணங்கியிருப்பது தெரிவிக்கப்பட்டது.

மாவிலாறு அணையின் மதகுகளை மூடிய தமிழ் மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் நோர்வேக் குழுவினரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இத் தகவலானது உடனடியாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித ஹோகன்ன, நோர்வே அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோருக்கும் நோர்வே சிறப்பு சமாதானத் தூதுவரால் தெரிவிக்கப்பட்டது.

அதேநாள் இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன், இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்டத் தலைவர் ஓவே ஜென்சன், திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் மற்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழுவினர் மாவிலாறு அணையின் மதகுகளைத் திறக்கச் சென்றனர்.

அந்த இடத்தை நோக்கிஇராணுவம் எறிகணை வீச்சுத் தாக்குதலை நடத்தியது. இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தலைவரின் அருகிலும் சில எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன.

மாவிலாறு மதகுகளைத்திறக்கச் சென்ற இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பதுங்குகுழிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் மாவிலாறு மதகுகளைத்திறக்க முடிவு செய்திருந்த நிலையில் அதே இடத்தில் அரசாங்கம் எறிகணை வீச்சுத் தாக்குதலை நிகழ்த்தியுள்ளது.

அரசாங்கத்தின் இந்த திட்டமிட்ட நடவடிக்கைகளுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் கடும் கண்டனம் தெரிவித்திருக்கின்றோம். தமிழீழ விடுதலைப்புலிகளின் நல்லெண்ண நடவடிக்கையை அரசாங்கம் நிராகரித்தது மட்டுமல்லாமல் நோர்வே அமைதி முயற்சிகளையும் சிறிலங்கா அரசாங்கம் சீர்குலைத்துள்ளது என தெரிவிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான மூதூரில் மக்கள் குடியிருப்புக்கள் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இராணுவம் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 15 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். பெரும் பகுதியைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். கட்டடங்களும் சொத்துக்களும் கடும் சேதமடைந்துள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியைச் சேர்ந்த 40 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் எதை வெளிப்படுத்துகிறது? இது தான் சர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்கள் விடுக்கும் வேண்டுகோள். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளின் பின்னால் உள்ள உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


## உடன் தேவை

### பத்திரிகை விநியோகஸ்தர்கள்

சொந்தமாகமோட்டார்சைக்கிள் வைத்திருப்பவர்கள் நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி.



## பதவி வெற்றிடம்

### பொது முகாமையாளர்

35-55க்கு வயதிற்குட்பட்டவர்கள் (மும்மொழித் தொடர்பாடல் உள்ளவர்களுக்கும் முகாமைத்துவ அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்)

விண்ணப்பங்களை 12.08.2006க்கு முன்னதாக நிர்வாக உத்தியோகத்தர், வலம்புரி, இல. 3, 2 ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.